DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1545
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 14, 2025

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

# "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" இயக்குனர் சபை உறுப்பினர்கள் மூவர் கம்போடியாவில் நடைபெறவுள்ள "ராஜேந்திர சோழ பெருமன்னன் கடாரத்தை வென்ற 1000வது ஆண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொள்கின்றார்கள்

யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆரம்பிக்கப்பெற்று தற்போது கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" அனைத்துலக மாநாட்டை 2027 மே மாதம் 14ம் 15ம் 16ம் திகதிகளில் ரொறன்ரோ மாநகரில் நடத்துவது என்ற தீர்மானம்11-11-2025 செவ்வாய்க்கிழமையன்று ஸ்காபுறோவில் நடைபெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பெற்றது. மேலும் கம்போடியா தமிழ்ச் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" சார்பாக கனடாவிலிருந்து இயக்கத்தின் கனடா கிளைத் தலைவரும் அகிலச் செயற்குழுவின் ஊடகத்துறை பொறுப்பாளருமான லோகன் லோகேந்திரலிங்கம். இயக்கத்தின் அகில செயற்குழுவின் பொருளாளர் மோகன் பாலசுப்பிரமணியம் மற்றும் இயகத்தின் கனடாக் கிளையின் பொருளாளர் ராம்சங்கர் சிவநாதன் ஆகியோர் கம்போடியாவில் நடைபெறவுள்ள எதிர்வரும் நவம்பர் 22ம் 23ம் திகதிகளில் நடைபெறவுள்ள "ராஜேந்திர சோழ பெருமன்னன் கடாரத்தை வென்ற 1000வது ஆண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொள்வது தீர்மானக்கப்பெற்றது.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)




# கனடிய மேடையொன்றில் கவிஞர் தாமரை அவர்களை கண்டு களிக்க விரும்புகின்றீர்களா?



எம் மொழி மீதும் எம் இனம் மீதும் பண்பாடு மீதும் அதீத பற்றுக் கொண்டவராய் பல ஆண்டு காலம் கவிதை உலகிலும் திரை உலகிலும் பூத்தது போல பிரகாசித்து வரும் கவிஞர் தாமரை அவர்கள் தற்போது கனடிய மண்ணில் கால் பதித்துள்ளார்.

15ம் திகதி சனிக்கிழமை மார்க்கம் நகரில் நடைபெறும் "தமிழ் மிறர்" பத்திரிகையின் 20வது ஆண்டு விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்காக இங்கு வந்துள்ள அவரை பார்க்கவும் அவரோடு உரையாடவும் அவரது உரையை செவிமடுக்கவும் விரும்புகின்றவர்கள் அழைக்கவேண்டிய தொலைபேசி: 416 697 0126

கவிஞர் தாமரை அவர்களை கனடாவிற்கு அழைத்தவர் "தமிழ் மிறர" பத்திரிகையின் ஆசிரியர் திரு சார்ள்ஸ் தேவசகாயம் -அதற்கான ஏற்பாடுகளைக் கவனித்தவர் திரு சிவம் வேலுப்பிள்ளை. இவர்கள் இருவர் உட்பட விமான நிலையத்தில் நண்பர்கள் பலர் கவிஞர் தாமரை அவர்களை வரவேற்பதைக் காணலாம்.



சிறு கற்கள் கொண்டு பெரும் சரித்திரம் படைப்போம்.
சிறு துளி பெரு வெள்ளம்
நாம் ஒன்றாய் சேர்ந்து கட்டி முடிப்போம்..
தமிழ் சமூக மையம் Tamil Community Centre

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

# தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்

**THE INTERNATIONAL CENTRE | இன்ரர்நஷனல் சென்ரர்**

**6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8 - GATE - 5**




### ரொறன்ரோ

**27-11-2025**
வியாழக்கிழமை
THE INTERNATIONAL CENTRE
(மண்டபம்-5 / Gate -5 )
6900 Airport Road
Mississauga ON L4V 1E8

**கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்**

வழமைபோன்று ஒரே இடத்தில்
மூன்று நிகழ்வுகள் இடம்பெறும்!

1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி

### மொன்றியல்

**27-11-2025**
வியாழக்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2

### ஒட்டாவா

**27-11-2025**
வியாழக்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2

Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com
www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# தொழிலாளர்களின் வாக்குகளால் அமைச்சர் பதவிகளை எட்டிய தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களை ஏறெடுத்தும் பார்க்காமலிருக்க அநுரவின் அரசு தொழிலாளர்களுக்குவீடுகளை வழங்குகின்றது!

இலங்கையில பெருந்தோட்ட உற்பதத்தித்துறையை ஆரம்பித்து அதில் வேலையாட்களாகவும். கங்காணிகளாகவும் கணக்குப் பிள்ளைகளாகவுசும் பணியாற்றுவதற்கு தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரைப்பெற்ற அந்த உழைப்பாளிகள் தான் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரமாக வைத்திருக்கும் வகையில் காடுகளிலும் மலைகளிலும இரத்தம் சிந்தினார்கள். ஆனால் இத்தனை ஆண்டுகள் கடந்து சென்றாலும் அவர்கள் குடும்பத்தினர்கள் இன்னும் வீடற்றவர்களாகவும் போதிய வருமானம் அற்றவர்களாகவுமே காணப்படுகின்றார்கள்.

மலையகத் தொழிலாளர்களை ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாக பாவித்து தொழிற்சங்கத் தலைவர்களாகவும் அரசியல் தலைவர்களாகவும் அமைச்சர்களாகவும் உயரத்திற்குச் சென்றவர்களால் ஓரவஞ்சகமாக ஏமாற்றப்படும் ஒரு சமூகமாக விளங்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களது வம்சாவழியினரும் அரசியலில் பல மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருந்தும் தமது தொழிற்சங்கத் தலைவர்களாகவும் பின்னர் அரசியல் தலைவர்களாகவும் விளங்கிய ஏமாற்றுத் தலைவர்கள் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் உச்சத்திற்கு கொண்டு சென்றார்களே தவிர சாதாரண தோட்டத் தொழிலாளர்களை ஏழ்மை நிலையிலும் வீடற்றவர்களாகவும் தொடர்ச்சியாக வைத்திருந்தார்கள் என்பதே உண்மையிலும் உண்மை.!

ஆனால். பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் தேவைகளை உணர்ந்து தற்போது அவர்களது சம்பளத்தை உயர்த்துவதற்கும் அவர்களுக்கான வசதிகள் நிறைந்த வீடுகளை அமைக்க இந்திய அரசாங்கத்தின் உதவியோடு தற்போதைய அநுர குமார திசநாயக்காவின் அரசாங்கம் நிஜமான திட்டங்களை நடைமுறைப் படுத்திவருகின்றது என்பதை உலகமே கவனித்து பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றது

இந்த ஏமாற்றும் பயணம் எப்போது ஆரம்பிக்கப்பெற்றது என்று நாம் உற்றுக் கவனித்தால, அதில் பல ஆச்சரியங்கள் அடங்கியிருக்கும். இலங்கையின் மலையக தோட்டத் தொழிலாளர்கள் என்ற உழைக்கும் மக்கள் கூட்டமாக. 1860 ம் ஆண்டளவில் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து இலங்கைக்கு படகுக-ளின் மூலம் அழைத்து வரப்பெற்றார்கள். அவ்வாறானவர்கள். இலங்கையின் மன்னார் பகுதிக்கு அழைத்து வரப்பெற்று பின்னர் கால்நடையாகவே மலையகப் பிரதேசத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு. அவர்கள் தேயிலை மற்றும் றப்பர் பெருந்தோட்டங்களை உருவாக்கும் வகையில் காடுகளை அழித்தல் செடிகளை நடுதல் போன்றவற்றில்ஈடுபத்தப்பெற்றார்கள்.

அப்பொழுது அந்த தொழிலாளர்களை மேற்பார்வை செய்ய வெள்ளைக்காரர்களை அமர்த்தியிருந்தாலும் தொழிலாளர்கள் மத்தியிலிருந்து சிலரையும் கங்காணிகளாகசுவும் கணக்குப் பிள்ளைகளாகவும் நியமித்தார்கள். இவ்வாறு நியமிக்கப்பெற்றவர்களில் சிலர்தான் பின்னாளில் சௌமியமூர்த்தி தொண்டமான் என்ற பெயரோடு தொழிற்சங்கத் தலைவராகவும் அரசியல் தலைவராகவும் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தில் அமைச்சராகவும் தன்னை வளர்த்துக் கொண்ட தொண்டமான் அவர்களின் பாட்டன் அல்லது பூட்டன் வழி முதற் குடி-களாவர்.

தொடர்ந்து இந்த தொண்டமான பரம்பரை தங்களை எவ்வாறாறு தொழிற்சங்கத் தலைவர்களாகவும் அரசியல் தலைவர்களாகவும் இலங்கையின் அமைச்சர்களாகவும் மாகாண கவனர்களாகவும் தங்களை பல வழிகளில் “உயர்த்திக்“ கொண்டவர்கள். இவர்களில் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் வரையிலான தொழிலாளர்களைச் சுரண்டுதல் மற்றும் ஏமாற்றுதல். சந்தாப் பணத்தை கையாடல் போன்ற விடயங்களை 1980ம் ஆண்டு வெளிவந்த மலையகச் சஞ்சிகையான “தீர்த்தக்கரை“ என்னும் கலை இலக்கிய முற்போக்கு இதழில் அதன் வெளியீட்டாளர் சாந்திகுமார் எழுதியிலுந்தார். அவர் ஒரு சட்டத்தரணி. அவரது மற்றுமொரு சகோதரரும் சட்டத்தரணி இருவரும் இணைந்து “தீர்தக்கரை“ சஞ்சிகையை வெளியிட்டார்கள். அந்த சஞ்சிகை இலங்கையின் பல பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்பப்பெற்றது.

சாந்திகுமார் அவர்கள் தொடர்ச்சியாக பல அத்தியாயங்களில் எவ்வாறு தொண்டமான் பரம்பவரை அமைச்சர் தொண்டமானுக்கு முன்பாக எவ்வாறு தொழிலாளர்களை ஏமாற்றியது என்று விளக்கமாக எழுதினார். எனினும் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுக்கு பின்னர் ஆறுமுகம் தொண்டமான் ஜீவன் செந்தில் தொண்டமான் போன்றவர்களும் அவர்களது சகாக்களும் தோட்டத் தொழிலாளர்களை எவ்வற்ற சுரண்டியும் அவ்வாறு சுரண்டிப் பெற்றுக் கொண்ட நிதியில் தமிழ்நாட்டுக்குச் சென்று உயர் கல்வியைப் பெற்றார்கள் என்பது விளக்கமாக எழுதப்பெற்றிருந்தன. ஆனால் தொண்டமான் குடும்பமும் அவர்கள் கையாட்களும் “தீர்த்தக்கரை“ சஞ்சிகையை நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டு அதனைச் சாதித்தும் விட்டார்கள். இவ்வாறாக ஜீவன் தொண்டமான் வரையும் இந்த “ஆதிக்கம்“ தொடர்கின்றதை நாம் பார்க்கின்றோம். இதே பாணியில் தான் மனோ கணேசன்- இராதாகிருஸ்ணன்-“குடு“ திகாம்பரம் என பல தொழிற்சங்கவாதிகள் அரசியலில் புகுந்து அமைச்சர்கள் வரை ஆனார்கள்.

மலையகதோட்ட தொழிலாளர்கள்பல ஆண்டுகளாக சிங்கள அரசியல்வாதிகளாகளாலும் பெருந்தோட்ட முதலாளிகளாலும் தொழிற்சங்கத் தலைவர்களாலும் ஏமாற்றப்பட்டு வந்துள்ளார்கள் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. அவர்களின் சம்பள உயர்வு சம்பந்தமான கூட்டு உடன்படிக்கை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை முதலாளி-மார் சம்மேளனத்திற்கும் சம்பள உயர்வு சம்பந்தமான கூட்டு உடன்படிக்கையில் கையொப்பமிடும் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டிக்குமிடையில் நடைபெற்று தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படுவது வழக்கம். இதன்படி சம்பள உயர்வு வழங்கப்படும்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வேலாயுதம், ஏனைய தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி சார்பில் இராமநாதன் ஆகியோர் கையொப்பமிட்டு வந்தனர்

2013 மார்ச் மாதம் 31ம் திகதியுடன் கூட்டு உடன்படிக்கை முடிவடைந்ததைத் தொடர்ந்து அன்றைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்க வேண்டிய கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் இலங்கை தொழி-லாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஆறுமுகம் தொண்டமான், ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையின் கீழ் இயங்கும் இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் வேலாயுதம் கூட்டு தொழிற்சங்களின் சார்பாக இராமநாதன் ஆகியோர் தோட்டதொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றி சிந்திக்காமல் 2013 ஏப்ரல் முதல் வாரத்தில் தோட்டத்தொழிலாளர்களுடய சம்பள உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டு முதலாளிமார் சம்மேளத்தினால் கொடுக்கப்பட்ட அடிப்படை நாட்சம்பளமான ரூபா 380 உடன் ரூபா 70 சேர்த்து ரூபா 450 சம்பள உயர்வை தோட்ட தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுத்துவிட்டோம் என கூறி வந்தனர்.

இவ்வாறான விடயங்கள் மலையகத் தலைவர்கள் எவ்வாறு தொழிலாளர்களை ஏமாற்றினார்கள் என்பதை விளக்குகின்றன. பெருந்தோட்ட முதலாளிகளிடமிருந்து சன்மானத்தையும் சிங்கள அரசியல் தலைவர்களிடமிருந்து அமைச்சர் பதவிகளையும் இவர்கள் பெற்றுக்கொண்டு தங்கள் தொழிலாளர்களின் வயிற்றில் அடித்தார்கள். இது கடந்த கால வரலாறு.

ஆனால் இன்று மலையக மக்களுக்கு புதிய எதிர்காலம் மலர்ந்துள்ளது போன்று தற்போதைய ஜனாதிபதி அநுர குமார அவர்களின் அரசாங்கத்தில் “காரியங்கள் இடம்பெறுகின்றன. அவரது கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் தோட்டத் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடுகின்றனர்.தற்பொது தொழிலாளர்களுக்கு வீடுகள் வழங்கப்பெற்று” காணி உறுதிபத்திரங்கள் வழங்கப்படுகின்றன

அ்ணமையில் இலங்கை ஜனாதிபதி அவர்களால் மலையக மக்களுக்கு காணி உறுதிபத்திரங்கள் வழங்கப்பட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் உருவாகியுள்ளது. பல தலைமுறைகளாக உழைத்து வாழ்ந்திருந்தாலும், நில உரிமை இல்லாத நிலைமையில் இருந்த மக்களுக்கு இந்நாள் ஒரு நம்பிக்கையின் தொடக்கமாகும். இந்த முயற்சி மலையக மக்களின் வாழ்க்கையில் பொருளாதார நிலைத்தன்மையையும் சமூக பாதுகாப்பையும் ஏற்படுத்தும். தங்கள் சொந்த நிலத்தில் தைரியமாக வி-வசாயம் செய்து, வீடுகள் அமைத்து, பிள்ளைகளுக்கு உறுதியான எதிர்காலம் உருவாக்கும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கிறது.

அதே நேரத்தில், அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை நாட்டின் நிதி வளங்களை மக்கள் நலனுக்காகச் செலவிடும் ஒரு நல்ல உதாரணமாகும். இதன் மூலம், “உழைப்பவர்க்கு உரிமை” என்ற உண்மையான ஜனநாயகக் கருத்து நடைமுறைக்கு வருகிறது.இது ஒரு சாதாரண ஆவணம் அல்ல - மலையக மக்களின் வரலாற்றை மாற்றும் உறுதியின் சின்னம்

, மலையக மக்களுக்கு மனித மரியாதையையும் சமூக நீதியையும் மறுதலித்து நின்ற தமிழ் பேசும் தலைவர்களாக விளளங்கியவர்கள் அவர்களை ஏமாற்றிய வண்ணம் தங்களை வளர்த்துக் கொள்ள தற்பொழுது மலைய மக்களின் நம்பிக்கையை மீண்டும் உயிர்த்தெழச் செய்ததற்கு தேசிய மக்கள் சக்கி அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு எமது வாழ்த்துக்களை நாம் தெரிவித்துக்கொள்கின்றோம்!

**கனடாவின் பனிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட......**



**கனடாவின் பனிக் காலத்தை யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக கழித்திட விரும்புகின்றீர்களா? யாழ்ப்பாணம் மானிப்பா நகரத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய அழகிய வீட்டை மாதாந்த அடிப்படையில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.**
**மேலதிக விபரங்களுக்கு:**
**Visnu** 0094 77515 6292 / 0094 77515 5331
**Whats App** 44 7957 561 555

**Room for rent in Scarborough**

**Room for rent in Scarborough .**
**1 B/R. 1 Bath. Central heating furnished.**

**Contact 647 648 8822**

**மிசிசாகா இலங்கை உணவகத்திற்கு சமையல்காரர் தேவை**

மிசிசாகா நகரில் இயங்கிவரும் புகழ்பெற்ற உணவகத்திற்கு உடனடியாக அனுபவம் உள்ள சமையல்காரர் தேவை. இலங்கை இந்திய உணவுகள் மற்றும் கறிகள் தயாரிக்கும் அனுபவம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- ராஜன் 416 457 8609

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அரச பொது நிர்வாகத்தில் அதிக ஆளணி காணப்படுகின்றது

- ந.லோகதயாளன்

## அரசின் நிதி எவ்வாறு விரயமாகின்றது என்பதற்கு நல்ல உதாரணம்!

இலங்கையில் உள்ள மாவட்டச் செயலகங்கள், மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி அலுவலகங்களில் அளவிற்கு அதிகமான பணியாளர்கள் இருப்பதாக புள்ளி விபரங்கள் உறுதி செய்கின்றது.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2025 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசதுறை பதவியணி பற்றிய தகவலிலேயே இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கு மாகாணத்தின் 2 மாவட்டங்களில் முகாமைத்துவ சேவை பணியாளர்கள் அதிகளவில் மேலதிகமாக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2,133 பேர் இருக்க வேண்டியபோதும் 2,659 பேர் பணியில் உள்ளதனால் 526 உத்தியோகத்தர்கள் மேலதிகமாக உள்ளனர். இருந்தபோதும் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய 3 பிரதேச செயலகங்களிலும் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட மிக குறைவான உத்தியோகத்தர்களும், மாவட்டச் செயலகம் உள்பட ஏனைய 12 பிரதேச செயலகங்களிலும் மிக அதிக ஆளணியினரும. காணப்படுகின்றனர்.

மாவட்டச் செயலகத்தில் 178 பேருக்கு பதிலாக 226 பேரும், காங்கேசந்துறை நகரில் 78 உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 92 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் 141 உத்தியோகத்தர்கள் பணியாற்ற வேண்டிய இடத்தில் 193 பேரும், நல்லூரில் 158 உத்தியோகத்தர்கள் அனுமதிக்கப்பட்டபோதும் 221 உத்தியோகத்தர்கள் பணியில் உள்ளனர், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 131 உத்தியோகத்தர்களிற்காக 175 உத்தியோகத்தர்களும், உடுவிலில் 132 பேர் அனுமதிக்கப்பட்டபோதும் 210 பேரும் தெல்லிப்பளையில் 167 உத்தியோகத்தர்களிற்கான அனுமதி உள்ளபோதும் 200 உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர்.

இதேபோன்று சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் 208 உத்தியோகத்தர்களிற்கே ஆளணி அங்கீகாரம் உள்ளபோதிலும் இங்கே 261 உத்தியோகத்தர்கள் பணியில் உள்ளனர், பருத்தித்துறையில் 150 உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 190 உத்தியோகத்தர்களும், கரவெட்டி பிரதேச செயலகத்தில் 143 பேரிற்கு அனுமதிக்கப்பட்டபோதிலும் 229 உத்தியோகத்தர்கள் பணியில் உள்ளதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இவ்வாறே கோப்பாய் பிரதேச செயலகத்திற்கான ஆளணி அங்கீகாரம் 143 உத்தியோகத்தர்களிற்கு இருக்கும்போது அங்கே 203 உத்தியோகத்தர்கள் பணியில் உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்த மட்டில் 556 உத்தியோகத்தர்கள் தேவையானபோதும் 633 உத்தியோகத்தர்கள் பணியில் உள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 586 பேரிற்காக 501 உத்தியோகத்தர்களும், முல்லைத்தீவில் 733 பேரிற்காக 533 பேரும், மன்னாரில் 685 பேருக்காக 567 பேரும் பணியில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் சேவை என்பதற்கு அவமானத்தை ஏற்படுத்திய செல்வம் அடைக்கலநாதன் பதவி விலகக் கோரி தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் பலர் "போர்க் கொடி"



- ந.லோகதயாளன்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமை பதவியிலிருந்து விலக மக்கள் சேவை என்பதற்கு அவமானத்தை ஏற்படுத்திய செல்வம் அடைக்கலநாதனுக்கு நெருக்குவாரம் கொடுக்கும் வகையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்கள் பலர் "போர்க் கொடி" பிடித்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அதற்கு இணங்கியுள்ளார்.

எனவே, வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழு கூட்டத்தில், செல்வம் உடனடியாக தலைமை பதவியிலிருந்து விலக வேண்டுமென உறுப்பினர்கள் பலர் கடுமையாக வலியுறுத்தினர். இதன்போதே தனது பதவியை ஜனவரி மாதம் பதவிவிலகுவதாக செல்வம் அடைக்கலநாதன் கால அவகாசம் கோரினார்.

தலைமைக்குழு கூட்டம் அன்றைய தினம் வவுனியா நெல்லி ஹொட்டலில் நடந்தது.

கூட்டத்துக்கு செல்வம் அடைக்கலநாதன் தலைமை தாங்கி நடத்த முயன்ற போது, உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர். நிகழ்ச்சி நிரலில், செல்வம் அடைக்கலநாதன் மீதான பெண் விவகார ஒலிப்பதிவு குற்றச்சாட்டு, எதிர்வரும் ஏப்ரலில் நடக்கவிருக்கும் கட்சியின் தேசிய மாநாட்டுக்கான ஏற்பாடு குறித்து விவாதிப்பதாக இருந்தது. குற்றம்சாட்டப்பட்ட செல்வம் அடைக்கலநாதனே கூட்டத்துக்கு தலைமை தாங்க முடியாது என உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கினர்.

இதனால் சலசலப்பு ஏற்பட, கூட்டத்தை தலைமை தாங்குவதிலிருந்து செல்வம் அடைக்கலநாதன் விலகிக் கொண்டார்.

இதனையடுத்து உபதலைவர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் கூட்டம் நடந்தது. தலைமைக்குழு உறுப்பினர்கள் நேரிலும், இணைய வழியிலுமான 18 பேர் கலந்து கொண்டனர்.

செல்வம் அடைக்கலநாதன் மீதான பெண் விவகாரம் பற்றிய குற்றச்சாட்டை பல தலைமைக்குழு உறுப்பினர்கள் முன்வைத்து, காரசாரமான கருத்துக்களை தெரிவித்தனர். இந்த விவகாரத்தில் செல்வம் அடைக்கலநாதன் பிழையாக நடந்து கொண்டார் என்ற கருத்தே அனைத்து தலைமைக்குழு உறுப்பினர்களும் தெரிவித்தனர்.

செல்வம் அடைக்கலநாதன் மௌனமாக அதை கேட்டுக் கொண்டிருந்தார். உபதலைவர் ஹென்றி மகேந்திரன், பிரசன்னா இந்திரகுமார், சபா குகதாஸ், சிங்கன், வினோ நோகராதலிங்கம் போன்றவர்கள் - செல்வம் அடைக்கலநாதன் உடனடியாக தலைமைப்பதவிலிருந்து விலக வேண்டுமென வலியுறுத்தினர்.

தன் மீதான பெண் விவகார குற்றச்சாட்டை செல்வம் அடைக்கலநாதன் ஏற்றுக்கொண்டார். "ஒரு தவறொன்று நடந்து விட்டது. நானும் அவசரப்பட்டு கதைத்து விட்டேன்" என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரலில் கட்சியின் தேசிய மாநாட்டில் தான் போட்டியிட வில்லையென்றும், அதில் விரும்பிய ஒருவரை தலைவராக தெரிவு செய்யுங்கள் என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

எனினும், அவரை பதவிவிலக வலியுறுத்திய உறுப்பினர்கள் அதை ஏற்கவில்லை. உடனடியாக பதவிவிலக வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தினர். இறுதியில், எதிர்வரும் ஜனவரி 24 ஆம் திகதி தேசிய மாநாட்டை நடத்தி, புதிய தலைவரை தெரிவு செய்யுங்கள். அதில், கட்சியின் தலைமைக்குழு உறுப்பினராகவோ, மத்திய குழு உறுப்பினராகவோ நான் கலந்து கொள்ளமாட்டேன் என செல்வம் அடைக்கலநாதன் வாக்குறுதி வழங்கினார்.

ஹென்றி மகேந்திரன், பிரசன்னா இந்திரகுமார், சபா குகதாஸ், சிங்கன், வினோ நோகராதலிங்கம் தவிர்ந்த ஏனையவர்கள் - செல்வம் அடைக்கலநாதனின் கோரிக்கையை ஏற்கலாம் என்றும், அவரை ஜனவரி வரை தொடர அனுமதிக்கலாமென்றும் தெரிவித்தனர். ஜனவரி இன்றி டிசம்பரிலும் மாநாட்டை நடாத்த முடியும் என கருத்து கூறப்பட்டபோது அதற்கான நிதியீட்டலை உடனடியாகப் பெற முடியாது எனக் கூறப்பட்டது.

இதையடுத்து, எதிர்வரும் ஜனவரியில் நடக்கும் ரெலோவின் தேசிய மாநாடு வரை தலைமைப்பதவியில் செல்வம் அடைக்கலநாதன் தொடர்வதென தீர்மானமானது.

இதேவேளை, கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து தலா 5 தலைமைக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

# மாவீரர் நாளை புனிதமான நாளாக அனுஷ்டிக்க பச்சிலைப்பள்ளி யபிரதேச சபை எடுத்துள்ள தீர்மானம்!



மாவீரர் நாளை ஒரு புனிதமான நாளாக கொண்டாட பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அன்றையநாள் பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மதுபானசாலைகளை மூடுவதென்று தீர்மானித்துள்ளது.

இன்றைய சபை அமர்வின்பின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், 2026ம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டம் எங்களுடைய 13 உறுப்பினர்கள் ஆதரவுடனும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

உண்மையில் எமது பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்டு முதல்முறையாக எமது சபை ஏகமனதாக வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இது ஒரு மாற்றம். நாட்டிலே ஏற்பட்ட மாற்றம் எமது சபையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இதன் அடிப்படையில் எமது பிரதேச சபையில் அனைத்து வேலைத்திட்டங்களும் விரைவாக மேற்கொள்ளப்படும்.

அன்றைய தினம் எமது சபையிலே மிக முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக எதிர்வரும் மாவீரர் நாளன்று அதாவது 27ம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எல்லைக்குள் அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும். இது ஒரு வரவேற்கத்தக்க விடயம்.

எமது இனத்தினுடைய விடிவிற்காக போராடி தமது இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர் செல்வங்களை நினைவு கூருவதற்காக அன்றையதினத்தை ஒரு புனிதமான நாளாக நினைவு கூருவதற்கு எமது சபை முடிவெடுத்துள்ளது என்றார்.

# யாழ்ப்பாணம். குப்பிளான் கிராமத்தில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஐவர் படுகாயம்!



கடந்த 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குப்பிளான் சந்தியில் இடம்பெற்ற குழு மோதலில் ஐவர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த ஐவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், இரண்டு குழுவினருக்கு இடையே அன்றையதினம் குப்பிளான் சந்தியில் மோதல் இடம்பெற்றது. இந்நிலையில் ஒரு குழுவினை சேர்ந்த ஒருவரும், மற்றைய குழுவினரை சேர்ந்த மூவரும், சமாதானப்படுத்த சென்ற முச்சக்கர வண்டி சாரதியுமென ஐவர் இந்த தாக்குதலில் படுகாயமடைந்தனர்.

குறித்த குழுவினர் மது போதையில் மோதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர்.



# கனடாவின் உயரிய இராணுவ விருதுகளில் ஒன்றான Order of Military Merit (M.M.M.) பெற்ற முதல் ஈழத்தமிழர் – வாகீசன் மதியாபரணம்

கனடிய செய்திகள் Canadian News

## யாழ் இந்துக் கல்லூரியின் பெருமைமிகு பழைய மாணவர்



கனடாவின் உயரிய இராணுவ மரியாதைகளில் ஒன்றான Order of Military Merit (M.M.M.) விருதை தலைநகரன்மான ஒட்டாவாவில் வசிக்கும் ஈழத்தமிழரான வாகீசன் மதியாபரணம் அவர்கள் பெற்றுள்ளார். இதன்மூலம், இவ்விருதை பெற்ற முதல் ஈழத்தமிழராக வரலாற்றில் பெயர் பதித்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விருது வழங்கும் விழா, கனடாவின் ஆளுநர் ஜெனரல் வசிக்கும் Rideau Hall மாளிகையில் சிறப்பாக நடைபெற்றது.

அகதியாக கனடாவிற்கு வந்த வாகீசன் அவர்கள், 30 ஆண்டுகளுக்கும் மேலாக கனடா இராணுவத்தில் சிறப்பாக பணியாற்றியுள்ளார். அர்ப்பணிப்பு, ஒழுக்கம், மற்றும் கடமை உணர்வுடன் பணியாற்றிய அவருக்கு, இந்த விருது கனடா அரசால் வழங்கப்படும் மிக உயரிய கௌரவங்களில் ஒன்றாகும்.

விருதைப் பெற்றபின் அவர் கருத்து தெரிவித்த போது,
“இந்த விருது ஒரு பதக்கம் மட்டுமல்ல - என் கனவின் நிறைவேற்றம்.
அகதியாக வந்த ஒரு தமிழ் இளைஞன், கனடா என்ற தேசத்துக்கு பணியாற்றி, அதன் உயரிய மரியாதையைப் பெறுவது மிகுந்த பெருமை அளிக்கிறது,”
என்று நெகிழ்ச்சியுடன் கூறினார்.

வாகீசன் மதியாபரணம் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1983 முதல் 1988 வரை கல்வி கற்றவர். அவர் கல்லூரியின் மாணவத் தலைவர் (1986-1988) ஆகவும், உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் அணிகளில் வீரராகவும், வர்த்தக மன்றத் தலைவர் (1987) ஆகவும், மேலும் சாரணர் அணியின் செயற்பாட்டாளராகவும் சிறந்தார்.

1988 ஆம் ஆண்டு கனடாவிற்கு குடிபெயர்ந்த அவர், Canadian Military College-இல் பட்டம் பெற்று 1995 இல் கனடிய இராணுவத்தில் இணைந்தார்.



பின்னர், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் நேட்டோ சமாதானப் படைகளில் கனடா சார்பாக பணியாற்றும் பெருமை பெற்றார்.


### தமிழ் மாணவர்களுக்கு உதவும் நற்பணி

தாயகத்தில் கல்வி சவால்களை எதிர்கொள்கிற தமிழ் மாணவர்களின் நலனை கருதி, அவர் சில நண்பர்களுடன் இணைந்து “தமிழ் மாணவர்கள் உதவித் திட்டம்” (Tamil Students Assistance) என்ற அமைப்பைத் தொடங்கி தொடர்ந்து நற்பணி செய்து வருகிறார்.

### சமூகத்தின் பெருமை

அவரது சாதனை, உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும், புதிய வாழ்க்கையைத் தொடங்கிய அகதிகளுக்கும் முன்னுதாரணமாகவும் ஊக்கமூட்டலாகவும் திகழ்கிறது. சமூக ஊடகங்கள் வழியாக பலரும் அவருக்கு பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

*- குரும்பையூர் மூர்த்தி - மொன்றியால்*














## Tamilthakaval.org

### ஒரு இலவச சேவை -- A Free Service



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை “info@tamilthakaval.org” என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" அனைத்துலக மாநாடு 2027 மே மாதம் 14ம் 15ம் 16ம் திகதிகளில் ரொறன்ரோவில் நடைபெறுகின்றது

## "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" சார்பாக கனடாவிலிருந்து மூன்று இயக்குனர் சபை உறுப்பினர்கள் கம்போடியாவில் நடைபெறவுள்ள ராஜேந்திர சோழ பெருமன்னன் கடாரத்தை வென்ற 1000வது ஆண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொள்கின்றார்கள்




யாழ்ப்பாணத்தில் 1974ம் ஆரம்பிக்கப்பெற்று தற்போது கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" அனைத்துலக மாநாடடை 2027 மே மாதம் 14ம், 15ம், 16ம் திகதிகளில் ரொறன்ரோ மாநகரில் நடத்துவது என்ற தீர்மானம் 11-11-2025 செவ்வாய்க்கிழமையன்று ஸ்காபுறோவில் உள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பெற்றது.

அன்றையை கூட்டத்தில் இயக்கத்தின் அகிலச் செயற்குழுவின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் இணையவழி ஊடாகக் கலந்து கொண்டார். நேரடியாக கலந்து கொண்டவர்கள். கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க அகிலச் செயற்குழுவின் தலைவர் சிவா. கணபதிப்பிள்ளை, இயக்கத்தின் கனடா கிளைத் தலைவரும் அகிலச் செயற்குழுவின் சர்வதேச ஊடகத்துறை பொறுப்பாளருமான லோகன் லோகேந்திரலிங்கம். இயக்கத்தின் அகில செயற்குழுவின் உதவிச் செயலாளர் ஆர்.ஆர். ராஜ்குமார் இயக்கத்தின் அகில செயற்குழுவின் பொருளாளர் மோகன் பாலசுப்பிரமணியன் மற்றும் இயகத்தின் கனடாக் கிளையின் பொருளாளர் ராம்சங்கர் சிவநாதன் ஆகியோர் ஆவர்.

மேற்படி கூட்டத்தில் சில அவசரமான தீர்மானங்கள் எடுக்கப்பெற்றன. அவற்றுள் மலேசியாவிலும். தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் சட்டவிரோதமாக இந்த புனிதமான இயக்கத்தைப் பயன்படுத்தி தங்கள் விருப்பத்திற்கும் சுய விளம்பரத்திற்குமாக கிளைகளை ஆரம்பித்து அதற்காக பொய்யான தகவல்களை வழங்கி அரசாங்கத்தில் பதிவுகளை செய்துள்ள "புல்லுருவிகளை" சட்டத்தின் முன்பாகக் கொண்டு வர உடனடியாக கனடாத் தலைமையகம் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தீவிரமான உரையாடப்பெற்று அவற்றை செயலாளர் நாயகத்தின் கவனத்திற்கு எழுத்து மூலம் அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பெற்றது.

அத்துடன் 1996ம் ஆண்டு அமரர் செல்லையா அவர்கள் தலைமைய-ில் பிரமாண்டமான முறையில் ரொறன்ரோ மாநகரில் நடத்தப்பெற்றது போன்று மற்றுமொரு அனைத்துலக மாநாடடை 2027, மே மாதம் 14ம் 15ம் 16ம் திகதிகளில் ரொறன்ரோ மாநகரில் நடத்துவது என்ற தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பெற்றது. அத்துடன் இந்த மாநாட்டிற்கான அனைத்து ஏற்பாடுகளை 2026ம் ஆண்டு தைத்திருநாளான பொங்கல் தினத்திலிருந்து ஆரம்பிப்பது என்றும் முடிவு செய்யப்பெற்றது.

மேலும் கம்போடியா தமிழ்ச் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" சார்பாக கனடாவிலிருந்து மூன்று இயக்குனர் சபை உறுப்பினர்கள் கம்போடியாவில் நடைபெறவுள்ள எதிர்வரும் நவம்பர் 22ம், 23ம் திகதிகளில் நடைபெறவுள்ள ராஜேந்திர சோழ பெருமன்னன் கடாரத்தை வென்ற 1000வது ஆண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அதற்காக இயக்கத்தின் கனடா கிளைத் தலைவரும் அகிலச் செயற்குழுவின் சர்வதேச ஊடகத்துறை பொறுப்பாளருமான லோகன் லோகேந்திரலிங்கம். இயக்கத்தின் அகில செயற்குழுவின் பொருளாளர் மோகன் பாலசுப்பிரமணியன் மற்றும் இயகத்தின் கனடாக் கிளையின் பொருளாளர் ராம்சங்கர் சிவநாதன் ஆகியோர் தங்கள் பொருட்செலவில் அங்கு செல்வதற்கும் தீர்மானக்கப்பெற்றது.

இங்கே காணப்படும் படங்கள் அன்றைய இயக்குனர் சபைக் கூட்டத்டதில் எடுக்கப்பெற்றவையாகும்.





# Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.


Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு!

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் டில்கோ விருந்தினர் விடுதியில் ஒரு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. கலாநிதி குருபரனை பணிப்பாளராகக் கொண்ட சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான யாழ்ப்பாண கற்கை நிலை யத்தால் அந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. இலங்கையில் உள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தின் நிதி அனுசரணையோடு நடத்தப்பட்ட அந்த நிகழ்வில் 230க்கும் குறையாதவர்கள் பங்குபற்றினார்கள். பொதுவாக அது போன்ற நிகழ்வுகளில் அவ்வளவு தொகையினர் பங்குபற்றுவது குறைவு. ஆனால் அன்று மண்டபம் நிறைந்திருந்தது.

மூன்றரை மணித்தியாலங்களுக்கு மேல் நடந்த அந்த நிகழ்வில், நான்கு அம்சங்கள் இருந்தன. முதலாவது மேற்சொன்ன சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான கற்கை நிலையத்தை அறிமுகப்படுத்துவது. இரண்டாவது, இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கைத் தீவில் இதுவரையிலும் இரண்டு சமூகங்களுக்கு இடை-யில் எழுதிக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களைச் சேகரிக்கும் டிஜிட்டல் தளத்தை அங்கு அறிமுகப்படுத்தியது. மூன்றாவது, மூத்த சட்டச் செயற்பாட்டாளர் சட்டத்தரணி ரட்ணவேல் அவர்களுடைய உரை. நான்காவது, நான்கு தமிழ்த் தேசிய கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட ஒரு நிகழ்வு.

நிகழ்வுக்கு தலைமை தாங்கிய குருபரன் அங்கு கூறியதுபோல தமிழ்த் தேசியப் பரப்பில் அவ்வாறான ஒரு சட்டச் செயற்பாட்டு நிறுவ-னம் உருவாக்கப்படுவது என்பது முக்கியமானது. தேச நிர்மாணத்தின் ஒரு பகுதி அது. தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான நிறுவனங்களை உருவாக்குவது. எவ்வளவுக்கு எவ்வளவு நிறுவன உருவாக்கிகள் ஒரு சமூகத்தில் தோன்றுகிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அந்த சமூகம் திரட்சியுறும்நொதிக்கும் கூர்ப்படையும்.

அங்கு அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிற்றல் ஆவணக் காப்பகத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. முதலாவது இனப் பிரச்சினை தொடர்பில் இதுவரை தமிழ்த் தரப்பால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் தொகுப்பு. இரண்டாவது பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பவற்றோடு தொடர்புடைய வழக்கு ஏடுகளை ஆவணப்படுத்துவது.

சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான கற்கை நிலையமும் "நூலகம்" நிறுவனமும் இணைந்து மேற்படி ஆவணங்களைச் சேகரித்து ஆவணப்படுத்தியுள்ள்ளன. இதுவும் தேச நிர்மாணத்தில் ஒரு பகுதிதான். அந்த நிகழ்வில் நூலகம் நிறுவனத்தின் பிரதிநிதியும் உரை நிகழ்த்தினார். அது ஒரு முழுமையான தொகுப்பு இல்லை என்றும் அதில் ஈடுபாடு கொண்டவர்கள் தமது பங்களிபின்மூலம் அதை முழுமைப்படுத்த வேண்டும் என்றும் அங்கு கூறப்பட்டது.

1921ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரையிலுமான சுமார் 104 ஆண்டு காலப்பகுதியில் தமிழ்த் தரப்பால் முன் வைக்கப்பட்ட அரசியலமைப்பு யோசனைகளும் இனப்பிரச்சினையோடு தொடர்புடைய உடன்படிக்கைகளும், ஆவணங்களும் அங்கே எண்ணிம வடிவத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. ஒரு நூற்றாண்டுக்கு மேலான காலப்பகுதிக்குரிய அந்த ஆவணங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது ஓர் அடிப்படைக் கேள்வி எழுகிறது. தமிழ் மக்கள் ஏன் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமது அபில-ாசைகளை அடைய முடியாமல் இருக்கிறார்கள்?

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக தமிழ் தலைவர்கள் சரியாகவோ பிழையாகவோ பொருத்தமாகவோ, பொருத்தம் இன்றியோ ஏதோ ஒரு தீர்வு முன்மொழிவை முன்வைத்து சிங்களத் தலைவர்களோடு பேசியிருக்கிறார்கள். ஏதோ ஓர் இணக்கத்துக்கு வந்திருக்கிறார்கள். ஆவணங்களில் கையெழுத்திட்டு இருக்கிறார்கள். அதன்மூலம், தமிழ் மக்கள் இந்தச் சிறிய தீவுக்குள் எப்பொழுதும் ஒரு தேசிய இனமாக ஏனைய இனங்களுடன் இணைந்து வாழ்வதற்குத் தயாராக இருந்திருக்கிறார்கள் என்பது அந்த ஆவணங்களைத் தொகுத்து பார்க்கும் பொழுது தோன்றுகிறது. தமிழ்த் தரப்பு தீர்வுக்குத் தயார் இல்லை அது பகல் கனவுகளை தீர்வு மேசையில் வைக்கின்றது; அந்தப் பகல் கனவுகளை அடைவதற்காக முயற்சிக்கின்றது; யதார்த்தமாகச் சிந்திப்பதில்லை அதைவிட முக்கியமாக தமிழ்த் தரப்பு ஒன்றாக இணைந்து தீர்வு முன்மொழிவுகளை மேசையில் வைப்பதில்லை... போன்ற பல்வேறு வி-தமான குற்றச்சாட்டுகளுக்கும் அந்த ஆவணத் தொகுப்பில் பதில் உண்டு.

தமிழ் மக்கள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இலங்கைத் தீவில் இணைந்து வாழும் விருப்பத்தை வெளிப்படுத்தும் விதத்தில் தீர்வு முன்மொழிவுகளை முன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயுதப் போராட்ட காலகட்டத்திலும்கூட திம்பு கோட்பாட்டில் தொடங்கி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரையிலும் தமிழ்மக்கள் தீர்வு முன்மொழிவுகளை வைத்திருக்கிறார்கள். ஆனால் கடந்த ஒரு நூ ற்றாண்டுக்கு மேலான காலப்பகுதியில் அந்தத் தீர்வு முன்மொழிவுகளில் பெரும்பாலானவற்றை நிராகரித்தது அல்லது உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டது அல்லது வாக்குறுதிகளை முறித்துக் கொண்டது சிங்களத் தலைவர்கள்தான். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் சில யுத்த நிறுத்தங்களை முறித்ததற்காக தமிழ்த் தரப்பின் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்படலாம். ஆனால் தமிழ்மக்கள் தீர்வுக்குத் தயாரில்லை அல்லது தமிழ் மக்கள் பேச்சுவார்த்தைகளில் விசுவாசமாக இல்லை அல்லது தமிழ் மக்கள் பகல் கனவுகளை பேச்சுவார்த்தை மேசையில் வைக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் முழுவதும் உண்மையானவை அல்ல என்பதனை அந்த ஆவணத் தொகுப்பு எடுத்துக்கூறுகிறது.

மேலும் அந்த ஆவணத் தொகுப்புக்கூடாக ஒரு விடயம் துலக்கமாக வெளித் தெரிகிறது.அந்த விடயத்தை அங்கு பேசிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரக்குமாரும் சுட்டிக்காட்டினார். "இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை இணங்க வைப்பதில் கணிசமான தூரத்துக்கு எடுத்துச்சென்ற ஓர் ஆவணம் இந்திய-இலங்கை உடன்படிக்கை" என்று கஜன் சொன்னார். இதுவரையிலுமான இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில், சிங்கள பௌத்த அரசு கட்டமைப்புக்குள் இணைக்கப்பட்ட ஒரே தீர்வு முயற்சி என்பது இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழான பதின்மூன்றாவது திருத்தம்தான். சிங்கள பௌத்த அரச கட்டமைப்பின் ஒற்றை ஆட்சி பண்பை அது உடைக்கவில்லை என்ற காரணத்தால்தான் அந்த 13ஆவது திருத்தம் அங்கே இணைக்கப்பட்டது என்றும் கஜன் சுட்டிக்காட்டினார். அதாவது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்குள், யாப்புக்குள் இணைக்கப்பட்ட ஒரே தீர்வு முயற்சி அதுதான். ஆனால் அதுவும் கூட்டாட்சி பண்புடையது அல்ல.

இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியயு என்னவென்றால், அந்தத் தீர்வு முயற்சி அதாவது இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு கீழான 13வது திருத்தம் என்பது எத்தகைய ஓர் அரசியல் சூழலில் யாப்புக்குள் இணைக்கப்பட்டது என்பதுதான். ஒருபுறம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம். இன்னொரு புறம் இந்தியப் பேரரசின் ராணுவ அழுத்தம்.

13வது திருத்தம் எனப்படுவது ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் விளைவு. அதேசமயம் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் இந்திய அமைதி காக்கும் படையின் பிரசன்னத்தின் பின்னணியில்தான் அதுவும் சாத்தியமாகியது. அதுமட்டுமல்ல அந்தத் தீர்வில் தமிழ்மக்கள் கையெழுத்திடவில்லை. இலங்கையும் இந்தியாவும்தான் கையெழுத்திட்டன.

அதாவது கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேல-ான காலப்பகுதியில் இனப் பிரச்சினை தொடர்பில் உருவாக்கப்பட்ட தீர்வுகளில் சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பின் யாப்புக்குள் உள்வாங்கப்பட்ட ஒரே தீர்வு அதுதான். ஆனால் அதையும் 38 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக வந்த இலங்கை அரசாங்கங்கள் அமல்படுத்தவில்லை மட்டுமல்ல, அந்தத் தீர்வை எப்படி மேலும் தோலிருக்கச் சுளை பிடுங்கலாம் என்றுதான் சிந்தித்துச் செயல்பட்டிருக்கின்றன.

அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் நிறைவேற்று அதிக-ாரமுடைய ஜனாதிபதி முறைமையின் கீழ் கடந்த நான்கு தசாப்த காலத்துக்குள் உருவாக்கப்பட்ட ஒரு தீர்வு அது. ஆனால் அந்தத் தீர்வை அதாவது யாப்பின் அந்தப் பகுதியை நிறைவேற்றாமல் விடுவதற்குத்தான் ஜனாதிபத-ியின் நிறைவேற்று அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதுதான் கடந்த சுமார் நான்கு தசாப்த கால வரலாறு.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலான காலப்பகுதியில் இலங்கைத் தீவில் இனப் பிரச்சினைக்காக எழு-திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் இரண்டே இரண்டு உடன்படிக்கைகள்தான் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் நின்று நிலைத்தன.

ஒன்று இந்திய-இலங்கை உடன்படிக்கை. மற்றது பிரபாகரன்-ரணில் உடன்படிக்கை. இரண்டு உடன்படிக்கைகளிலும் மூன்றாவது தரப்பின் பிரசன்னம் இருந்தது. இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின்னணியில் இந்திய அமைதி காக்கும் படை நாட்டுக்குள் இறக்கப்பட்டது. நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளில் ஸ்கண்டிநேவிய யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழு நாட்டுக்குள் நின்றது.

இந்த இரண்டையும் தவிர மூன்றாவதாகக் கூறக்கூடியது ஐநாவின் பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம். ஆனால் இதில் ஐநா, அழுத்தத்தைப் பிரயோகிக்கின்ற அல்லது கண்காணிக்கின்ற ஒரு தரப்பாகச் செயற்படவில்லை. அதனால்தான் நிலைமாறு கால நீதியானது சுமந்திரன் கூறுவது போல "தோற்றுப்போன பரிசோதனையாக" முடிந்தது. அதைத் தோற்கடித்தது தமிழர்கள் அல்ல, சிங்களத் தரப்புத்தான்.

எனவே இப்பொழுது ஒரு தெளிவான சித்திரம் கிடைக்கிறது. தமிழ் மக்கள் போராடியதால்தான், பிராந்தியப் பேர-ரசாகிய இந்தியாவின் தலையீட்டினால்தான் பதின்மூன்றாவது திருத்தம்கூட சாத்தியமாகியது. தமிழ் மக்கள் போராடவில்லை என்றால் அதுவும் கிடைத்திருக்காது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை டில்கோ விருந்தினர் விடுதியில் நடந்த சந்திப்பில் உரை நிகழ்த்திய சித்தார்த்தன் ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொன்னார். அனுரவும் உட்பட எந்த ஒரு சிங்களத் தலைவரும் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தர மாட்டார்கள் என்று. குறிப்பாக பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வை முன்வைத்த சந்திரிக்கா 2009க்குப்பின் இந்திய ஊடகம் ஒன்றினால் நேர்காணப்பட்டபோது, என்ன சொன்னார் என்பதனை அவர் சுட்டிக்காட்டினார். பேட்டி கண்டவர் கேட்கின்றார், "இப்பொழுது உங்களுக்குச் சந்தர்ப்பம் தரப்பட்டால் நீங்கள் முன்பு முன்வைத்த அந்த முன்மொழிவை நிறைவேறுவீர்களா?" என்று. அதற்குச் சந்திரிக்கா கூருகிறார் "Perhaps less" - "பெரும்பாலும் இல்லை" என்ற பொருள்பட.ஏனென்றால் இப்பொழுது விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லை என்பதால் என்றும் கூறியுள்ளார்.

மேலும் சித்தார்த்தன் ஒரு விடயத்தைச் சொன்னார். நிலைமாறு கால நீதியின் கீழ், புதிய யாப்பு ஒன்றை உருவாக்குவதற்காக உழைத்தபோது, உருவாக்கப்பட்ட குழுக்களில் ஒன்றில் அவரும் அங்கம் வகித்தார். அக்காலகட்டத்தில் சம்பந்தர் அடிக்கடி தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை வழங்குவார். "அடுத்த தீபாவளிக்குத் தீர்வு அடுத்த வருஷப்பிறப்புக்குத் தீர்வு" என்று சம்பந்தர் அடிக்கடி நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கி வந்தார். ஒருமுறை சித்தார்த்தன் இதுதொடர்பாக சம்பந்தரிடம் கேட்டிருக்கிறார். எதற்காக அப்படிக் கூறுகிறீர்கள்? இதில் நாங்களும் சம்பந்தப்பட்டிருப்பதனால் மக்கள் எங்களிடமும் கேட்கிறார்கள், என்று. அதற்கு சம்பந்தர் சொன்னாராம், "இந்த யாப்புருவாக்க முயற்சியில் தமிழ்த் தரப்பின் பிரதிநிதியாக நான் ஈடுபட்டு வருகிறேன். இந்த முயற்சி வெற்றி பெறாது என்று நானே சொன்னால், பிறகு எதற்கு அதில் நான் ஈடுபடுகிறேன் என்று மக்கள் கேட்பார்கள். எனவே நான் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வாக்குறுதிகளை வழங்க வேண்டியுள்ளது" என்ற பொருள்பட.

இதைச் சொன்ன சித்தார்த்தன் மேலும் ஒரு விடயத்தைச் சொன்னார், அந்த முயற்சி வெற்றி பெறாது என்பது சம்பந்தருக்கும் தெர-ியும் என்று. அதாவது சம்பந்தர் தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாக பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வந்திருக்கிறார். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், சம்பந்தர் தனது மக்களுக்கு உண்மையைச் சொல்லவில்லை.

(தொடர்ச்சி 9 பக்கம்)

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மட்டக்களப்பு கரடியனாறு கித்துள் பகுதியில் உழவு இயந்திரம் மோட்டார் சைக்கி மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழப்பு – உழவு இயந்திர சாரதி கைது

கனகராசா சரவணன்

செங்கலடி பதுளை வீதி கித்துள் பகுதியில் உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற தனியார் பஸ் வண்டி சாரதி உயிரிழந்த சம்பவம் 13-11-2025 வியாழக்கிழமை மாலையில் இடம்பெற்றுள்ளது இதில் உழவு இயந்திர சாரதியை கைது செய்துள்ளதாக கரடியனாறு பொலிசார் தெரிவித்தனர்.

கரடியனாறு இராயபுரத்தைச் சேர்ந்த 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிரபாகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனியார் பஸ் சாரதியான குறித்த நபர் சம்பவ தினமான மாலை 6.30 மணியளவில் உறுகாமத்திலுள்ள பஸ் வண்டி உரிமையாளரின் வீட்டில் பஸ் வண்டியை கொண்டு சென்று நிறுத்திவிட்டு கடமையை முடித்து கொண்டு இராஜபுரத்திலுள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் பிரயாணித்து கொண்டிருந்தார்.

அப்போது மரப்பாலத்தில் இருந்து கித்துள் நோக்கி பிரயாணித்த உழவு இயந்திரமும் கித்துள் பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற சாரதி படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் உழவு இயந்திர சாரதியை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# ஏறாவூரில் இரு கூரிய வாள்களுடன் பெண் ஒருவர் கைது

ஏறாவூரில் பிரதேசத்தில் பெண் ஒருவரை இரண்டு கூரிய வாள்களுடன் 09ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினை அடுத்து சம்பவ தினமான அன்று பொலிசார் ஏறாவூர் முதலாம் பிரிவிலுள்ள மையவாடி வீதி மீராகேன் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றை சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன் போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த கூரிய இரு வாள்களை மீட்டதுடன் 41 வயதுடைய பெண் ஒருவரை கைது செய்தனர். இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த பெண்ணின் கணவர் ஏற்கனவே போதை பொருளுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட விளக்கமறியலில் சிறையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் போதைப்பொருள் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (13.11.2025)

20 கிராம் மெத்தம் பெட்டமைன் (ஐஸ்) போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தமை மற்றும் வியாபாரம் செய்தமை தொடர்பான வழக்கில், எதிரிக்கு ஆயுள் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தக் குற்றம், கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு, 12ம் திகதி புதன்கிழமை மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம். மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், வழக்குத்தொடருநர் தரப்பிற்காக அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் ஆஜராகி, வழக்கினை நெறிப்படுத்தினார். எதிரி தரப்பிற்காக ஜனாதிபதி சட்டத்தரணி யு. ஆர். டி சில்வா ஆஜராகியிருந்தார்.

வழக்கு விசாரணையின் முடிவில், வழக்குத் தொடுநர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப் பட்டதாக மன்றம் ஏற்றுக்கொண்டது.

இதையடுத்து, எதிரியை குற்றவாளியாக அறிவித்த நீதிபதி எதிரிக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

சமீப காலமாக, மன்னார் பிரதேசத்தில் இடம் பெறும் பாரிய போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில், குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை மற்றும் நீண்ட கால கடுமிய சிறை தண்டனைகள் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.



# இலங்கை கல்வி வெளியிட்ட பிரிவின் முன்னாள் பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ் மன்னாரில் சடலமாக மீட்பு



(10-11-2025)

மன்னார்-யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள சிப்பியாறு பாம்பு வழிகாட்டி அந்தோனியார் ஆலய வளாகத்தில் இருந்து 10ம் திகதி திங்கட்கிழமை காலை சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் வடக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளராக வும், இலங்கை கல்வி வெளியிட்ட பிரிவின் பணிப்பாளராக வும் கடமையாற்றிய திருஞானம் ஜோன் குயின்ரஸ் (வயது-60) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் திங்கட்கிழமை (10ம் திகதி) காலை தனது வாகனத்தில் பாம்பு வழிகாட்டி அந்தோனியார் ஆலயத்திற்கு வருகை தந்து வழிபாட்டில் ஈடுபட்ட நிலையில் உயிரிழந்திருக்கலாம் என தெரிய வருகின்றது.

சடலத்தை கண்ட ஆலய நிர்வாகத்தினர் இலுப்பைக்கடவை பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த போலீசார் சடலத்தை பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.பிரபானந்தன் சடலத்தை பார்வையிட்டார்.

பின்னர் மேலதிக நடவடிக்கைகளுக்காக சடலத்தை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

## வீணாவின் கவிக்கணை

சிறகடித்து பறக்க ஆசை,
காற்றாய் மாற ஆசை,
பனியாய் பொழிய ஆசை
என்று
இயல்பாய் நடக்காதவற்றை
ஆசைபடுவதை விட்டு விட்டு,
காற்றில் மிதக்கும்
உன் கால்களைக்கொஞ்சம்
தரையினில் பதித்து,
நிதானம் கொண்டு
யோசித்திடு இளைஞனே,
உனக்கு தேவையானது
என்னவென்று அறிவாய்!

*(8 பக்கத் தொடர்ச்சி)*

## கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு!

மூன்றாவது தரப்பின் அழுத்தம் இல்லாமல் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு ஒரு தீர்வை நோக்கி வளையாது என்பதனை புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில், 2016இல், மன்னாரில், ஆயர் இல்லத்துக்கு அருகே நடந்த, "தடம் மாறும் தமிழ்த்தேசியம்?" என்ற கருத்தரங்கில், நான் சம்பந்தருக்குச் சுட்டிக்காட்டினேன். அப்பொழுது சம்பந்தர் என்னை நோக்கி, தலையைச் சாய்த்து, மண்டைக்கண்ணால் பார்த்துக் கொண்டு அழுத்தம் திருத்தமான குரலில் சொன்னார் "சிங்களத் தலைவர்கள் ஒரு தீர்வைத் தர மாட்டார்கள் என்று கூறுவது வரண்ட வாதம்வறட்டு வாதம்" என்று. ஆனால் எது வறண்ட வாதம் என்பதனை வரலாறு நிரூபித்தது. தந்தை செல்வா கலையரங்கின் கூரை பதிந்த அறைக்குள் சம்பந்தரின் உடல் தனித்துவிடப்பட்ட இரவில் வரலாறு தான் ஒரு கண்டிப்பான கிழவி என்பதை நிரூபித்தது.

எனவே ஒரு நூற்றாண்டுக்கு மேலாகக் கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால், சித்தார்த்தன் கூறுவதுபோல, இப்போதுள்ள அனுரவும் உட்பட எந்த ஒரு சிங்கள தலைவரும் தமிழ் மக்களுக்குத் தாமாக முன்வந்து தீர்வைத் தர மாட்டார்கள் என்பதுதான். கஜேந்திரக்குமார் அங்கே சுட்டிக்காட்டியதுபோல, சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்புக்குள் இணைக்கப்பட்ட ஒரே ஒரு தீர்வு 13ஆவது திருத்தம்தான். அதுகூட தமிழ்மக்களின் இரத்தத்தால் வரையப்பட்டது; இந்திய பேரரசின் அழுத்தம் இருந்தது.

எனவே தமிழ் மக்கள் போராடவில்லை என்றால், மூன்றாவது தரப்பு ஒன்றின் அழுத்தம் இல்லையென்றால் தமிழ் மக்களுக்கு இனியும் தீர்வு கிடைக்காது.

இந்த இடத்தில், கடந்த ஞாயிற்றுக்கிழமை டில்கோவில் கூடிய கட்சிகளும் உட்பட எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் இரண்டு முக்கிய கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டும். முதலாவது கேள்வி, சமஸ்ரியை அடைவதற்கு தமிழ்க் கட்சிகளின் வழி வரைபடம் என்ன? இந்தக் கேள்வியை சில ஆண்டுகளுக்கு முன் விக்னேஸ்வரன் அப்பாவித்தனமாக கேட்டிருந்தார். அவரிடம் அதற்குப் பதில் இல்லை என்பதனால் அப்படிக் கேட்டிருந்தார்.

இரண்டாவது கேள்வி. மூன்றாவது தரப்பு ஒன்றின் அழுத்தம் இல்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்பதே ஒரு நூற்றாண்டு காலமாக கற்றுக்கொண்ட பாடம். அப்படியென்றால் அந்த மூன்றாவது தரப்பை அணைத்து எடுப்பதற்கு தமிழ் மக்களிடம் உள்ள வழிவரைபடம் என்ன?

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தன்னைப் பற்றிய எங்கும் பேசப்படும் உண்மையான விடயங்களை பகிர்ந்த நடராஜா பெஞ்சமின்ற்கு எதிராக நீதிமன்றத்தை நாடும் செல்வம் அடைக்கலநாதன் என்னும் போலி; அரசியல்வாதி



எனது பெயருக்கும், கௌரவத்திற்கு பங்கம் விளைவிக்கக்கூடிய வகையிலும், அரசியலில் இருந்து ஒதுக்கக் கூடிய வகையிலும், இணைய ஊடகங்கள் ஊடாக பல குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ள நடராஜா பெஞ்சமின் கனகரத்தினம் என்பவருக்கு எதிராக சட்டத்தரணி ஊடாக கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக தற்போது தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நடராஜா பெஞ்சமின் கனகரத்தினம் என்பவருக்கு எதிராக சட்டத்தரணி ஊடாக கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன். அவரிடம் ஐந்து கோடி ரூபாய் (ஐம்பது மில்லியன்) நஷ்ட ஈடு கோரியுள்ளேன். எனது அரசியல் நடவடிக்கையை பாதாளத்திற்குள் கொண்டு செல்லுகின்ற ஒரு சூழலை ஏற்படுத்துகின்ற வகையில் அவர் தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

உண்மைக்கு புறம்பான கருத்துக்களை கூறி இருக்கிறார். அவரது கருத்துக்கள் எனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளது.

அந்த வகையில் நடராஜா பெஞ்சமின் கனகரத்தினம் இதற்கு ஆதாரத்துடன் பதில் கூற வேண்டும்.இதனை தொடர்ந்து நீதிமன்றத்தை நாட உள்ளேன்.

அவரது குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தில் நிரூபிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். அந்த வகையில் என் மீது அவர் சுமத்திய குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்.

மேலும் இதுவரை இலங்கையில் உள்ள நீதிமன்றங்கள் அல்லது பொலிஸ் நிலையங்களில் எனக்கு எதிராக எந்த முறைப்பாடுகளும் அல்லது விசாரணைகளும் இல்லை இப்போது தான் நான் செய்த தவறுக்காக விமர்சிக்கப்படுகின்றேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

# சட்டத்தால் மட்டும் சமூகத்தை மாற்ற முடியாது; இனத்தின் வரலாற்றை பாதுகாக்க ஆவண காப்பகம் முக்கியம் என்கிறார் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன்!




சட்டத்தை மட்டும் வைத்து ஒரு சமூகத்தை மாற்ற முடியாத நிலையில் ஒரு சமூகத்தின் வரலாற்றை எடுத்துக்காட்டுவதற்கு ஆவண காப்பகம் முக்கியமானது என சட்டத்தரணி கலாநிதி குமார வடிவேல் குருபரன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அரசியல் தீர்வும் பொறுப்புக் கூறலும் ஒரு எண்ணிம ஆவண காப்பக அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு தொடக்க உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு சமூகத்தின் தேவைகளை நோக்கங்களை நிறைவேற்ற சட்டத்தை மட்டும் பயன்படுத்த முடியாது. ஒரு சமூகத்தின் கடந்த கால வரலாற்று சம்பவங்களை அறிய அவர்களின் ஆவணங்களை பாதுகாப்பது அவசியம்.

ஆவணக் காப்பகம் என்பது குறிப்பாக தமிழ் மக்களின் கடந்த கால வரலாறுகளை அறிவதற்கும் எதிர்வரும் காலங்களில் அதன் ஊடாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் ஆராய்வதற்கு உதவியாக இருக்கும்.

எங்களுடைய முயற்சிகளை நாங்களே பூர்த்தி செய்ய வேண்டும் என்ற சிறு முயற்சியின் காரணமாக யாழ்ப்பாண நூலகத்துடன் இணைந்து ஆவணக் காப்பகம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

இந்த சிறிய தேடல் எமது வரலாற்றில் பின்னோக்கி இடம் பெற்ற அரசியல் நீதியான கடிதத் தலைப்புக்கள், கடிதப் பரிமாற்றங்கள் உடன்படிக்கைகள் என்பவற்றை தேடி இந்த ஆவண காப்பகத்தில் பதிவிட்டுள்ளோம்.

பல விடயங்கள் தேட வேண்டி உள்ளமையால் உங்களிடம் கிடைக்கப்பெற்ற ஆவணப்படுத்தப்பட வேண்டும் என கருதப்படும் விடையங்கள் அல்லது சேர்க்கப்பட வேண்டும் என கருதப்படும் விடயங்களை எம்முடன் தொடர்பு கொண்டு சமர்ப்பிக்க முடியும்.

ஆகவே புதிய அரசியலமைப்பு வர இருக்கின்றது என கூறப்படுகின்ற நிலையில் எமது ஆவணக் காப்பகத்தின் மூலம் புதிய அரசியலமைப்புக்கு தேவையான விடயங்களை அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகமானது சர்வதேசத்துக்கு காட்டும் கண் துடைப்பு என்கிறார் மூத்த சட்டத்தரணி கேஎஸ் இரத்தினவேல்!




இலங்கையில் பொறுப்பு கூறல் கானல் நீராக காணப்படுகின்ற நிலையில் சுயாதீன வழக்கு தொடுநர் அலுவலகம் சர்வதேசத்திற்கு காட்டும் கண்துடைப்பு அலுவலகம் என மூத்த சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் தெரிவித்தார்.

கடந்த 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அரசியல் தீர்வும் பொறுப்புக் கூறலும் ஒரு எண்ணிம ஆவண காப்பக அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு தொடக்க உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம் என்னைப் பொறுத்தவரையில் ஒரு கண் துடைப்பு அலுவலகம் சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது.

உலகில் பல்வேறு நாடுகளில் காணப்படும் சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம் ஒரு சில குறைபாடுகள் இருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை தீர்க்கும் அலுவலகங்களாக செயல்படுகின்றன.

ஆஜென்டினா, குவாட்டலாமா கொசுவா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் இந்த அலுவலகங்கள் செயபடுகின்றன.

மேலும், இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்புகள் எதிர்பார்க்கின்ற பொறுப்பு கூறல் விவகாரம் பின்னோக்கி பகிர்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு இன்மையே காரணம்.

சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குகளை உரிய காலப் பகுதியில் முடிவுறுத் தவறுமானால் அதே சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருக்கும் சட்டத்தரணிகள் இரண்டு மூன்று வருடங்களில் நீதிபதியாக பதவி உயர்வு பெற்று சென்று விடுவார்கள் வழக்குகள் வருடக்கணக்கில் இழுத்தடிப்புச் செய்யப்படும்.

ஆகவே இலங்கையில் பொறுப்பு கூறல் மற்றும் சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம் சர்வதேசத்திற்கு காட்டும் கண் துடைப்பு என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிவஞானம் சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# "கார்த்திகை வாசம்" மலர்க்கண்காட்சி கிட்டு பூங்காவில் வெள்ளிக்கிழமை ஆரம்பமாதகின்றது

## தமிழ்நாட்டிலிருந்து தொல். திருமாவளவன் பங்கேற்பு



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடத்துகின்ற "கார்த்தின கார்த்திகை வாசம்" மலர்க்கண்காட்சி நல்லூர் கிட்டு பூங்காவில் (சங்கிலியன் பூங்கா) வெள்ளிக்கிழமை (14.11.2025) பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இத்தொடக்க விழாவில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

அவர் இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக ஏற்கெனவே யாழ்ப்பாணம் சென்றுள்ளார் என எமது சென்னைச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் தம்பிராசா யுகேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இத் தொடக்க நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா கலந்துகொள்கிறார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தொடக்க உரையாற்ற, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் இக் கண்காட்சி இம் மாதம் 23ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் முன்னிரவு 7.00 மணி வரை நடைபெறவுள்ளது. கண்காட்சியைப் பார்வையிடவரும் மாணவர்களுக்கு வழமை போன்று இம்முறையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


உங்கள் உடல் வலிகளிலிருந்தும் தசைப் பிடிப்பு காரணமான உபாதைகளிலிருந்தும்
தகுந்த சிகிச்சை மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்...
MiracleHealth
ஸ்காபுறோ நகரில்
3000 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2V1
என்னும் விலாசத்தில் இயங்குகின்றது.
( Scarborough General Hospital அருகில்)
Meet Our Team
Physiotherapy • Massage Therapy • Counselling • Ayurvedic Therapy • Acupuncture • IV Nutrition Therapy
We are accepting new patients.
தமிழிலும் உரையாடும் வசதிகள் உள்ளன.
Phone:
416.289.4444


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160 OR 416-893-3216


POWERED BY
Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
RemitB
Remitbee Online Money Transfer Service
Best exchange rates in Canada
100% online and available on all platforms
Secure, fast and convenient
100,000+ Canadian customers
100+ partners around the globe
Sending to 80+ countries in 50+ different currencies
$5 billion transferred as of 2021
உதயன் பத்திரிகையின் 29வது ஆண்டு விழாவும்
2025 ஆண்டிற்கான பல்சுவைக் கலை விழாவும்
29th Anniversary Celebrations and Uthayan Cultural Festival-2025
சிறப்புப் படைப்பாக
"எரிந்த நம் யாழ் நூலகம்"
Tickets:
VIP $50
Regular $15
DEC 13th, 2025
சனிக்கிழமை மாலை 6.00 மணி
* பயனுள்ள உரைகள்
* இசை
* நடனம்
* நாடகம் மற்றும்
* கவிதா நிகழ்வு ஆகியன
இவ்வருட விழாவின் பிரதம விருந்தினர்
கனடா மொன்றியால் "தமிழாழி"
கலை இலக்கிய அமைப்பின் நிறுவனர்
"மணிவிழா நாயகன்" "பாட்டருவி"
க.உயிரவன் அவர்கள்
ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்ற கலாச்சார மண்டபம்
1120 Tapscott Rd Unit 3,
Scarborough, ON M1X 1E8
K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA
647302 1189
VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
கனகாம்பிகை
தங்க நகை கடன்
தொடர்புக்கு
416-754-7198
CALL US: 416-269-7198
Latika Gold House
35 Karachi Dr Unit 37, Markham ON L3S 0B5
Ph: 647-996-5922 | 905-201-6000
www.latikagoldhouse.ca
AMMA PAWN BROKER
அம்மா நகை அடைவு மடம்
CASH FOR GOLD
416-757-0034
416-994-3861
வீடு வாங்க விற்க
Excel Realty Ltd., Brokerage
Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY
நியூ ரங்கனாஸ்
200$ Bonus
STANDARD MORTGAGES INC.
Raj Subrayam
Director
CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7
Fashion WORLD INC
Exclusive Clothing Collection
7393 Markham rd, Unit 82,
Markham, On. L3S 0B5
905 471 2223
www.thefashionworld.com
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
N.K.S DRAPERY & BLINDS FABRIC
More than 25 years Experience
KETHA
416.321.6420
Sri Vallipuranathar
INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal - Corporation - New Home HST Filling
Selva Vettyvel
416 568 4301
905 471 4050
204-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8
Chapel Ridge
COMPUTEK COLLEGE
Muraly Srinarayanathas
Chief Stragey Officer
2425 Eglinton Ave East Suite 400
Toronto, ON M1K 5G8
Tel: 416-321-9911 ext. 320
Fax: 416-775-9323
Markham Campus
7 Eastvale Dr, Suite 202
Markham, ON L3S 4N8
Tel: 905-471-3344
muraly@computek.edu / www.computek.edu
OATC
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services For Personal & Small Business
Corporate Tax & Income Tax Returns
416-285-6900
MiracleHealth
MAHAANS
PICK & PRESS OIL MILL
ORGANIC BULK STORE
வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Broker
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd,Unit 3
Toronto, ON. MIP 2L5
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Rajeev Koneswaran
Owner & Broker
416 568 1078
SANTHA
PLUMBING & DRAINAGE SERVICES
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca
மொன்றியல் மாநகரில் பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்குத் புகழ்பெற்ற ஓர் தமிழ் மளிகை மாளிகை
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519
For Tickets and information: 416-732-1608 or 416-752-1524




# திருகோணமலையில் பனைசார் கைப்பணி பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம்!




பனைசார் கைப்பணிப் பொருட்களின் பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் திருகோணமலை பிரதேச சபை மண்டபத்தில் 10ம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கடமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் பனை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் திருகோணமலை பனை அபிவிருத்தி சபைக் கிளையின் மேற்பார்வையில் இவ்வைபவம் நடத்தப்பட்டது.



பிரதம அதிதியாக பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிர-தீப், விசேட அதிதியாக வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா ஆகியே-ாரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் 200க்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் பனைசார்ந்த கைத்தொழில்களை விருத்தி செய்யும் முகமாக பயனாளிகளுக்கு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பயனாளிகளுடன் கலந்துரையாடி அவர்களுடைய தேவைகளையும் பிரச்சினைகளையும் கேட்டறிந்து அதற்கு தேவையான ஆலோசனைகளை பனை அபிவிருத்தி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலா-ளர், பனை அபிவிருத்தி சபையின் தலைவர் மற்றும் அதிகாரிகள் அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளர் சிவனேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







பைரவி நுண்கலைக்கூடத்துடன்
சஹானா இசைக்கல்லூரியும் சிகரம் கல்விச்சாலையும்
இணைந்து வழங்கும்
WINSMART ன்
FACILITY MAINTENANCE SERVICES
கார்த்திகை பூக்கள்
மாவீரர்களுக்கு ஓர் இசை அஞ்சலி
POWERED BY
K T GROUP
Sunday | November 16th, 2025
Time :4:30pm
Queen Palace Banquet Hall
1173 BRIMLEY RD, SCARBOROUGH, ON M1P 3G5
Bhairavi MUSIC ACADEMY
Sahanah Music Academy
CANADA
SIGARAM Learning

# ஓரணி திரளாது விட்டால் வடக்கும் பறிபோகும்...




**"வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ் தேசியக்கட்சிகள் தனித்தனியாக முதலமைச்சர் வேட்பாளர்களை அறிவித்து போட்டியிட்டால் வடக்கு மாகாணசபை தேசிய மக்கள் சக்தியிடம் பறிபோவதை யாராலும் தடுக்க முடியாது. ஓரணியாக பொது வேட்பாளரை அறிவித்து போட்டியிட்டால் மட்டுமே வடக்கு மாகாணத்தை தமிழ் தேசியக்கட்சிகள் தக்க வைக்க முடியும். இல்லையேல் "பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு கட்டிய கோவணத்தையும் பறி கொடுத்த கதை"யாகவே முடியும்"**

**------------------------------------------------------------------- கே.பாலா -**

இலங்கையில் மாகாணசபைகளுக்கான தேர்தல் பழைய முறையிலா அல்லது புதிய முறையிலான நடத்தப்படும்? எப்போது தேர்தல்கள் நடத்தப்படும்? 9 மாகாணசபைகளுக்கும் ஒன்றாக நடத்தப்படுமா அல்லது பிரித்து, பிரித்து நடத்தப்படுமா? என்ற எந்தவொரு கேள்விகளுக்கும் விடையில்லாத நிலையில் மாகாணசபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்ற தகவல் மட்டும் திரும்பத் திரும்பக்கூறப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில் இத்தேர்தல் தொடர்பில் சிங்கள அரசியல் கட்சிகள் பெரிதாக அலட்டிக்கொள்ளாத நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளிடையிலேயே பெரும் பரபரப்பு ஏற்பட்டு மாகாணசபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்ற வலியுறுத்தல்கள் அதிகரித்துள்ளதுடன் மாகாணசபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களும் வியூகங்களும் தீவிரமடைந்துள்ளன.

ஆனால் பாராளுமன்றத்தில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையை நிகழ்த்திய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, "மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த அரசாங்கம் 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கி உள்ளது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது. தேர்தலை நடத்துவதற்கான பொறுப்பு பாராளுமன்றத்திற்கே உள்ளது எனவே.கட்சித் தலைவர்கள் இணைந்து சரியான தேர்தல் முறையை உருவாக்கித் தந்தால் நாம் தேர்தல் நடத்தத் தயார்.மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு சட்டம் ஒன்று உள்ளது. எனினும் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முடிவடையவில்லை. உங்களது அரசாங்கத்தில் எல்லை நிர்ணைய சட்டத்தை நிறைவேற்றியிருக்க முடியும். எனினும் நீங்கள் அதை செய்யவில்லை.

எல்லை நிர்ணய அறிக்கையை சமர்ப்பித்த போது இந்த நாட்டில் முதலாவது தடவையாக அதனை சமர்ப்பித்த பைசர் முஸ்தபா அமைச்சரே அதற்கு எதிராக கையுயர்த்தினார். அமைச்சரே கொண்டு வந்த அறிக்கையை அவரே தோற்கடித்தார் என்பதே விந்தை. இப்போது எம்மிடம் மாகாண சபைத் தேர்தலை கேட்கின்றனர். இப்போது சட்டத்தில் இடமில்லை. நான் சட்டமா அதிபரிடம் அதற்காக சட்டத்தில் காணப்படும் இடம் தொடர்பில் தெளிவுபடுத்துமாறு கேட்டுள்ளேன். விருப்பு வாக்கு தேர்தல் முறை வேண்டாம் என இங்கு சட்டம் நிறைவேற்றப்பட்டதை அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். தேர்தலை எப்போது நடத்துவது என்பது நான் தீர்மானிக்க முடியாது.பாராளுமன்றமே அதற்கு தீர்மானிக்க வேண்டும் எனக் கூறி மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட முடியாமைக்கான பழியை தற்போதைய எதிர்க்கட்சிகள் மீது போட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் பொலிஸ், காணி அதிகாரங்களைத் தவிர ஏனைய அதிகாரங்களை பெயரளவில் கொண்டிருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் காட்டி வரும் தீவிரம் தற்போது தமிழ் தேசிய கட்சிகளுக்கு இம்மாகாணங்களில் இருக்கும் கொஞ்ச நஞ்ச உரித்தையும் மக்கள் செல்வாக்கையும் முற்றாக துடைத்தழித்துவிடும் நிலைமையை ஏற்படுத்தும். இதனை உணராதவர்களாகவே தமிழ் தேசிய கட்சிகள் நடந்துகொள்கின்றனர் என்பதையே வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் தேசியக்கட்சிகளின் "நீயா, நானா" அரசியல் வெளிப்படுத்தி நிற்கின்றது. அது ஏன், எப்படி என்பதனைப் பார்ப்போம்.

இலங்கையில் தமிழர்களின் தனி நாடு கோரிய ஆயுதப் போராட்டமே மாகாண சபை ஆட்சி முறைக்கு வித்திட்டது. இப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு, இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987 அக்டோபர் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் முக்கிய இலக்கு இலங்கை அரசு அதன் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதாகவே இருந்தது. இதன் படி 1987 நவம்பர் 14 ஆம் திகதி பாராளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது. 1988 பெப்ரவரி 3 ஆம் திகதி இலங்கையில் மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம், வடக்கு மாகாணம், வடமேற்கு மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணம் என ஒன்பது மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன.

மாகாணசபைகளுக்கான முதலாவது தேர்தல் 1988 ஏப்ரல் 28 ஆம் திகதி வடமத்திய, வடமேல், சப்ரகமுவ, மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கு இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக 1988 ஜூன் 2 ஆம் திகதி மத்திய, தென், மற்றும் மேல் மாகாணங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதன்பின்னர் இணைந்த வடக்கு,கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் 1988 நவம்பர் 19ஆம் திகதி நடத்தப்பட்டது. மாகாண சபையின் பதவிக் காலம் 5 வருடங்களாக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் 1993 ஆம் ஆண்டில் இரண்டாவது மாகாணசபைத்தேர்தலும் 2004 ஆம் ஆண்டில் மூன்றாவது மாகாணசபைத் தேர்தலும் முதலில் ஒரே தடவையில் நடத்தப்பட்ட நிலையில் பின்னர் தேர்தல்கள் பிரித்து பிரித்து நடத்தப்பட்டதால் 2008 - 2009 ஆம் ஆண்டுகளில் நான்காவது மாகாணசபைத் தேர்தலும் 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்த மாகாண சபைத்தேர்தல்களும் இடம்பெற்றன.

மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின் பத்தாம் சரத்து மற்றும் அரசமைப்பின் 154 ஈ உறுப்புரை ஆகியனவற்றின்படி, மாகாண சபையொன்றின் பதவிக்காலம் நிறைவடைந்து, அந்த மாகாணசபை கலைந்த நாளிலிருந்து, நான்கு வார காலத்துக்குள், குறித்த மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான அறிவித்தலை, தேர்தல் ஆணைக்குழு விடுக்க வேண்டும். ஆனால், மாகாண சபைகள் கலைந்து, பல வருடங்களாகியும் இன்றுவரை மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவித்தல் விடுக்கப்படவில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள சட்டச் சிக்கல்தான் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாத சூழலை ஏற்படுத்தியிருக்கின்றதென காரணங்கள் கூறப்பட்டு வந்தது.

இன்னொரு பக்கத்தில், மாகாண சபைகள் உருவாகக் காரணமான 13ஆவது திருத்தச்சட்டமானது, இந்தியா, இலங்கையின் இறைமையில் தலையீடு செய்வதற்கு காரணமாக இருக்கின்றது. ஆகவே இலங்கையின் ஆட்புல எல்லை சுயாதீனத்தினை உறுதிப்படுத்துவதற்காக அதனை புதிய அரசியலமைப்பிலிருந்து நீக்க வேண்டும் மாகாணசபை முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டுமென விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர போன்ற இனவாதிகள் மாகாணசபைகளுக்கான தேர்தல்களை நடத்த கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தி வரும் நிலையில் புதிய அரசியலமைப்பு விரைவில் உருவாக்கப்படும் என தற்போதைய அநுரகுமார அரசும் உத்தரவாதம் அளித்துள்ளது.


இந்நிலையில் இலங்கையில் உள்ள 9 மாகாணசபைகளும் கலைக்கப்பட்டு வருடக்கணக்காகின்றபோதும் அவற்றுக்கான தேர்தலை நடத்துவதில் கடந்த நல்லாட்சி அரசோ அல்லது கோத்தபாய ராஜபக்ச அரசோ அல்லது அதற்கு பின்னர் வந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான் அதிர்ஷ்ட அரசோ அக்கறைகாட்டிடாத நிலையில் தற்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படுமென்ற ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசின் அறிவிப்பைத் தொடர்ந்தே மாகாணசபைத்தேர்தல் தொடர்பான தற்போதைய பரபரப்புக்களும் எதிர்வு கூறல்களும் அரசியல் அரங்கை ஆக்கிரமித்துள்ளன.

நாட்டிலுள்ள 9 மாகாணசபைகளுக்குமான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்கான தேர்தல்தொடர்பிலும் இங்குள்ள கள நிலைவரம் தொடர்பிலும் பார்த்தால் சில வேளைகளில் தேர்தல் நடத்தப்பட்டால் தமிழ் தேசியக்கட்சிகளுக்கு "நல்ல செய்தி" கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே கூறவேண்டியுள்ளது. இதற்கு வேறுயாரும் காரணம் அல்ல. தமிழ் தேசியக்கட்சிகளே காரணம் என்பதனையும் அடித்துக்கூற வேண்டியுள்ள நிலைமையே இவ்விரு மாகாணங்களிலும் உள்ளது. அதிலும் கிழக்கு மாகாணத்தை விடவும் வடக்கு மாகாணத்தில் தமிழ் தேசியக்கட்சிகளின் நிலைமை படு மோசமாகவே உள்ளது.

கிழக்கு மாகாணத்தில்தமிழ் தேசிய அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் இலங்கைத்தமிழரசுக்கட்சி பலமான நிலையில் உள்ளது. அதேவேளை கருணாஅம்மான், பிள்ளையான் தலைமையிலான கிழக்கை மையமாகக்கொண்ட கட்சிகள் மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதால் அவர்களினால் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு பெரிய பின்னடைவுகள் ஏற்பட வாய்ப்பில்லை. இது அண்மைய பாராளுமன்றத்தேர்தலிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ் வாக்குகள் பிரிவதற்கான வாய்ப்புக்களும் தமிழ் தேசியக்கட்சிகளுக்கிடையிலான தலைக்கன அரசியல் போட்டிகளும் அங்கு கிடையாது. கிழக்கைப்பொறுத்தவரையில் கிழக்கின் ஆட்சியை கைப்பற்றுவதில் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கிடையிலான போட்டி மட்டுமே இருக்கும். இறுதியாக நடந்த கிழக்கு மாகாண சபைக்கானதேர்தலில் கூட தமிழ் தேசியக்கூட்டமைப்பு அதிக ஆசனங்களைக் கைப்பற்றிய நிலையில் அக்கட்சியின் விட்டுக்கொடுப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியமைத்ததே வரலாறு.

ஆனால் வடக்கு மாகாணத்தின் நிலைமை முற்றிலும் மாறுபட்டது. இங்கு தமிழ் தேசியக்கட்சிகளுக்கு முஸ்லிம், சிங்களக்கட்சிகள் எதுவுமே போட்டியில்லை. போட்டியென்பதே தமிழ் தேசியக்கட்சிகளுக்கிடையில்தான். இந்தப்போட்டியினால்தான் வடக்கு மாகாண ஆட்சியை இந்த தமிழ் தேசியக்கட்சிகள் பறிகொடுக்கும் நிலைமையும் ஏற்பட்டு வருகின்றது. 38 ஆசனங்களைக்கொண்ட வடக்கு மாகாணசபையில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றும் கட்சியே ஆட்சியமைக்க முடியும். ஆனால் தமிழ் தேசியக்கட்சிகள் என்ற பெயரில் உள்ள இலங்கைத்தமிழரசுக்கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு எனப்பிரிந்துகிடப்பதுடன் நீயா நானா போட்டியுடன் தலைக்கன அரசியலில் ஈடுபடுவதுடன் "விட்டுக்கொடுப்பு - ஒற்றுமை" என்றால் கிலோ என்ன விலை எனக்கேட்கும் நிலையில் இக்கட்சிகள் இருப்பதே வடக்கு மாகாணம் பறிபோவதற்கு காரணமாக அமையவுள்ளது.

ஏற்கனவே நடந்து முடித்த பாராளுமன்ற, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் வடக்கு மாகாணத்தில் விஸ்வரூப வெற்றி பெற்ற தற்போதைய அரசான தேசிய மக்கள் சக்தி கட்சி வடக்கிலுள்ள தமிழ் தேசியக்கட்சிகளின் இந்த தலைக்கன, ஒற்றுமையில்லாத, விட்டுக்கொடுப்பில்லாத அரசியல் குணத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி வடக்கு மாகாணசபையையும் முதலமைச்சர் பதவியையும் கைப்பற்ற மிகத்தீவிரமாக, அதேவேளை மிகவும் ரகசியமான தயார்படுத்தல்களை ஏற்கனவே தொடங்கிவிட்டது.




(தொடர்ச்சி 17 பக்கம்)



# அரங்கேற்றமா அல்லது கச்சேரியா என வியக்கவைத்த இசைச் செல்வி விஷ்ணா திரவியராஜின் அரங்கேற்றம்!

கனடிய செய்திகள்
Canadian News

நீண்ட நாட்களுக்குப்பின்னர் ஒரு கர்நாடக வாய்ப்பாட்டு இசை அரங்கேற்றம் கடந்த 9.11.2025 ஞாயிறன்று இடம்பெற்றது. கனடாவில் பிறந்து வளர்ந்த இளம் இசையாசிரிை- யயான திருமதி. வாரகி விஜயராஜாவின் மாணவியான செல்வி. விஷ்ணா திரவ- ியராஜ் அவர்களின் இசையரங்கம் ஸ்காபுறோ ஆர்மேனியன் கலையரங்கில் இடம்பெற்றது.

இந்த அரங்கேற்றத்திற்கு அணிசெய் கலைஞர்களாக வயலின் - கலைப்பிரதீபா ஜெயதேவன் நாயர், மிருதங்கம் - கௌரிசங்கர் பாலச்சந்திரன், கடம்- மிருந்தங்க வித்தகர் மயூரன் தனஞ்சயன் ஆகியோரோடு செல்வி அபர்ணா குழந்தைவேலு ஆகியோர் மேடையில் அரங்கேற்றத்தை நேர்த்தியாக நகர்த்திச் செய்ய பக்கபலமாக விளங்கினார்கள். அங்கு நடுநாயகமாக விளங்கினார் அரங்கேற்ற நாயகி செல்வி விஷ்ணா.

மிகக் கம்பீரமாக அவரது இசை பிரவாகித்தமையைச் சபையோர் மிக அமைதியாக இரசித்து மகிழ்நதனர் என்பது எனது அவதானிப்பாக காணப்பட்டது. சபையோர் பார்வையாளர்கள் களரிக்கு அனுமதிக்கு முன்னராகவே அரங்கேற்றம் சிறப்புடன் நடைபெறுவதற்கான பூஜை மற்றும் வழிபாடுகள் இடம்பெற்றன.

இவ்விழாவைச் சிறப்பான நெறிப்படுத்தி மேன்மைப்படுத்துவதற்காக சிறப்பு விருந்தினர்ாக அழைக்கப்பட்ட "அன்பு அறிவிப்பாளர்" பி.எச். அம்துல்கமீட் அவர்கள் அறிமுகப்படுத்தி நெறிப்படுத்தினார். விஷ்ணாவின் சகோதரி அனைவரையும் வரவேற்று உரையாற்றியதோடு பி.எச். அப்துல்கமீட் அவர்களையும் அறிமுகப்படுத்தியதோடு அவர் மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் இசைக்கலைஞர்களையும், அரங்கேற்றச் செல்வியையும் சபைக்கு அறிமுகம் செய்துவந்தார்.

அப்துல் ஹமீட் அவர்கள் தனது ஆரம்ப உரையில் மிகச் சுருக்கமாக இசையின் தொன்மைபற்றி எடுத்துரைத்தார் அரங்கச் செல்வி விஷ்ணா திரவியராஜ் தனது இசைப் பயணத்தை இசை ஆசிரியையும் ரொறன்ரோ மருத்துவ மனை- னயில் உளவியல் மேற்பார்வையாளராகவும் பணியாற்றி வருகின்றார். அவர் தனது இசைப் பயணத்தைப் பிரபல இசை, நடன வித்தகர் ஸ்ரீமதி அழகானந்த நாத் அவர்களிடமும் அன்றைய பிரம விருந்தினராகக் கலந்துகொண்டுள்ள இசையாசிர- ியை ஸ்ரீமதி சுகல்யா ராஜி கோபாலகிருஷ்ணன் அவர்கிடம் மட்டுமன்றிப் பல்வேறு பிரபல இசை மேதாவிகளான ரி.என். சேசகோபாலன், ஓ.எஸ். தியாகராஜன் போன்றோரிடம் தன்னை இசையால் வளப்படுத்திக்கொண்டவர். இவ்வித மேன்மைகளைப் பெற்றுக்கொண்ட இளம் இசை ஆசிரியையை இனங்கண்டு பெற்றோர்களான திரு.திருமதி. ஜெயந்தினி திரவியராஜ் தம்பதியினர் தங்கள் செல்வ மகளை ஒப்படைத்ததன் விளைவாக இன்று அதன் அறுவடையைக் கண்டு பூரித்து நிற்பதைக் காணமுடிந்தது.







இசை அரங்கம் பைரவி இராகத்தில் அமைந்த வர்ணத்தோடு ஆரம்பித்து ஹம்சத்துவனியில் அமைந்த கருணை செய்வாய் என்னும் பாபநாசன் சிவனின் கீர்த்தனத்தையும், ஹணமூர்த்தி என்னும் இராகத்தில் அமைந்த கணமுர்த்தே என்னும் ஜெகராஜா அவர்களின் கீர்த்தனத்தையும், பூர்வ கல்யாணியில் அமைந்த ஆனந்தநாட்டியம் ஆடுவாய் என்னும் நீலகண்ட சிவனின் கீர்த்னத்தைத் தொடர்ந்து சுத்த சந்நியாசியில் அமைந்த "நாராயண நின் நாமடே" என்னும் புரந்தரதாசரின் கீர்த்தனையைத் தொடர்ந்து காம்போதி இராகத்தில் அமைந்த "காணக் கண் கோடி வேண்டும்" என்னும் பாபநாசன் சிவ- னின் கீர்த்தனத்தையும். ஆதனைத் தொடர்ந்து அந்தோலிக இராகத்தில் அமைந்த "சேவிக்க வேண்டும் ஐயா" என்னும் முத்துத்தாண்டவரின் கீர்த்தனையோடு தனி ஆவர்த்தனம் மிகச் சிறப்பாக மிருதங்கமும் கடமும் போட்டிபோட்டு மண்டபம் அதிர ஒலியெழுப்பியதைத் தொடர்ந்து இராகம் தானம் பல்லவி கிந்தோழத்தில் இசை ஆசிரியர் திருமதி வாரகி விஜயராசா அவர்களால் அமைக்கப்பட்டு சிறப்பாக நிகழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து சாம இராகத்தில் அமைந்த "வருவாரே" என்னும் கோபால கிருஷ்ண பாரதியாரின் கீர்த்னத்தை மிகச் சாதாரணமாக ஒரு சங்கீத வித்துவானைப் போன்று சபையோரும் இசையால் மகிழத்தந்த செல்வி விஷ்ணா தொடர்ந்து ஜோன்புரி இராகத்தில் அமைந்த "ஆசை முகம்" என்னும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கீர்தனத்தை மிக லாவகமாக எமக்களித்தார்.

தொடர்ந்து மதுவந்தியிலமைந்த "கண்ட நாள் முதலாய்" என்னும் கீர்த்தனத்தைத் தொடர்ந:து பெஹாக் ராகத்தில் அமைந்த லால்குடி ஜெயராமனின் "தில்லான" மிக லாவகமாக நீண்ட சங்கதிகளோடு இசைத்ததை அவதானிக்கவும் இரசிக்கவும் முடிந்தது.

தொடர்ந்து திருப்புகழோடு இசையரங்கம் முடிவுற்றது.

அதனைத் தொடர்ந்து பக்கவாத்திய இசைக்கலைஞர்களை இசையரசி விஷ்ணாவும் பெற்றோரும் சகோதரிகளும் இணைந்து பொன்னாடைபோர்த்தியும் அன்பளிப்புகள் வழங்கியும் கௌரவித்தனர். தொடர்ந்து முன்னைநாள் கொத்தணி அதிபர் .த.சிவபாலு அவரகள் வாழ்த்துப் பா மடலை வாசித்துக் கையளித்துப் பாராட்டியதைத் தொடர்ந்து அன்பு அறிவிப்பாளர் ஜனாப் அப்துல் கமீட் அவர்கள் கௌரவம் செய்யபடப்பட்டதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் ஸ்ரீமதி சுவர்ண சுகல்யா ராஜி கோபாலகிருஷ்ணன் அவர்கது சிறப்புரை இடம்பெற்றது. .இசைச் செல்வி விஷ்ணா ஒவ்வொரு கீர்த்தனத்தையும் எவ்வாறு சிறப்பாக பாடின- ார் என்பதையும் அதற்காக அணி இசைதந்த அனைத்துக் கலைஞர்களையும் பாராட்டினார்.

அதனைத் தொடர்ந்து அன்றைய அரங்கேற்றத்தின் மையப்புள்ளியாக அமைந்த இசை ஆசிரியை திருமதி வாரகி விஜயராஜா அவர்கள் தனது மாணவியைப் பற்றியும் தனது குருவைப்பற்றியும் தன்னை முன்னிலைப்படுத்திய பெற்றோருக்கும் நன்றி கூறியதோடு தன்னிடம் துணிந்து விஷ் ணாவை ஒப்படைத்த பெற்றோரையும் நன்றிகலந்த அன்போடு நினைவிருத்தி உரையாற்றினார். தொடர்ந்து விஷ்ணா அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

இசைச் செல்வி விஷ்ணாதனது நான்காவது வயதில் ஆரம்பித்த இசைப் பயணம் 15 ஆண்டுகளின் பின்னர் சபையோரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட நிறைவாக இந்த அரங்கேற்ற நிகழ்வு காணப்பட்டது.





- த.சிவபாலு பி.எட்.சிறப்பு, எம்.ஏ

# கனடா – ஸ்காபுறோ நகரில உள்ள "யுகம் வானொலி" கலையகத்தில் சந்தித்துக் கொண்ட ஊடகவியலாளர்கள் இருவர்

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5





கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லே- ாகன் லோகேந்திரலிங்கம் மற்றும் யுகம் வானொலி நிலையத்தின் அதிபர் கணபதி ரவீந்திரன் ஆகி- யோர் சில நாட்களுக்கு முன்னர் கனடா - ஸ்காபுறோ நகரில உள்ள "யுகம் வானொலி" கலையகத்தில் சந்தித்துக் சில முக்கிய விடயங்கள் பற்றி உரையாடினார்கள்.

அவர்கள் இருவரும் அங்கம் வகிக்கும் கனடா பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் மற்றும் பலமொழி சார்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள் எதிர்நோக்கும் தடைகள் பற்றி இரு ஊடகவியலாளர்களும் மனந்திறந்து உரையாடினார்கள்.

மற்றும் எதிர்வரும் டிசம்பர் 6ம் திகதி நடைபெறவுள்ள யுகம் வானொலி ஆதரவில் கனடிய தமிழ்க் கலைஞர்கள் குழு நடத்தும் "நாடகப் பெருவிழாவைப் பற்றியும் அதே மாதம் டிசம்பர் 13ம்திகதி நடைபெறவுள்ள உதயன் பல்சுவைக் கலை விழா - 2025 தொடர்பாகவும் பரஸ்பரம் தங்கள் தேவைகள் பற்றியும் உரையாடினர்.

இங்கே காணப்படும் படங்கள் யுகம் வானொலியின் கலைக்கூடத்தில் எடுக்கப்பெற்றவை.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வடக்கு மாகாணக் கல்வித் திணைகளம் வெளியிட்டுள்ளஆசிரியர் இடமாற்றப் பட்டியலில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாடு சென்ற ஆசிரியரின் பெயர்!



வடக்கு மாகாணக் கல்வித் திணைகளத்தினால் வெளியிடப்பட்டுள்ள சேவையின் தேவை கருதிய ஆசிரிய இடமாற்றப்பட்டியலில் வெளிநாடு சென்ற ஆசிரியர் ஒருவரின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியர் கல்வி திணைக்களத்தின் அனுமதியின்றி வெளிநாடு சென்றமையினால் 2024.09.12 திகதி NP/41/20/01/01/06/1-123 இலக்கமும் கொண்ட கடிதத்திற்கு அமைவாக 2024.03.01 முதல் அவரது பதவி வறிதாக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் அண்மையில் வெளியாகிய வடமாகாண ஆசிரிய இடமாற்றப்பட்டியலில் குறித்த ஆசிரியர் மடு வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில், கிளிநொச்சி வலயத்தில் அதிபர் சேவையில் உள்ள ஒருவருக்கு 2026 ஆம் ஆண்டு ஆசிரியர் இடமாற்ற பட்டியலில் பெயர் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண கல்வி திணைக்களத்தில் முறைகேடான இடமாற்றங்கள் இடம்பெறுவதாக தெரிவித்து யாழ்ப்பாண நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது கல்வித் திணைக்களம் மீது ஏற்பட்டுள்ள சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

(15 பக்கத் தொடர்ச்சி)

## ஓரணி திரளாது விட்டால் வடக்கும் பறிபோகும்...

மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தினால் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதனைக்கூட தேசியமக்கள்சக்தி தீர்மானித்துவிட்டது. இதற்கு அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார "தற்போதுள்ள ஆட்சிக்காலத்தை விடவும், இன்னும் மேலதிகமாக ஐந்து வருடங்களுக்கு - நாமே அரசியல் அதிகாரத்துடன் தொடர்ச்சியாக இருக்கப் போகின்றோம். அதுமட்டுமல்ல, எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலிலும்கூட வடக்கு - கிழக்கு உட்பட நாமே அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் இதை எழுதிவைத்துக் கொள்ளுங்கள்" என விடுத்துள்ள சவால் உதாரணம்.

எனவே வடக்கு மாகாணத்தையும் வடக்கு மாகாண சபையையும் தமிழ் தேசியக்கட்சிகள் தக்க வைக்க வேண்டும் என்றால், பாதுகாக்க வேண்டும் என்றால் தமது ஆட்சியை நிலைநாட்ட வேண்டும் என்றால் நிச்சயம் தமிழ் தேசியக்கட்சிகள் ஒன்றிணைந்தால் மட்டுமே அது சாத்தியம். வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடக்கும்போது தமிழ் தேசியக்கட்சிகள் தனித்தனியாக முதலமைச்சர் வேட்பாளர்களை அறிவித்து போட்டியிட்டால் வடக்கு மாகாணசபை தேசிய மக்கள் சக்தியிடம் பறிபோவதை யாராலும் தடுக்க முடியாது. எனவே ஓரணியாக ஒரு பொது வேட்பாளராக ஏதோவொரு கட்சியிலிருந்து ஒருவரை நியமித்து போட்டியிட்டால் மட்டுமே வடக்கு மாகாணத்தை தமிழ் தேசியக்கட்சிகள் தக்க வைக்க முடியும்.

இல்லாது விட்டால் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு போராடி அத்தேர்தல் நடத்தப்பட்டதன் மூலம் வடக்கு மாகாணத்தை சிங்களக்கட்சி ஒன்றிடம் பறிகொடுக்க வேண்டிவரும் அதாவது பொல்லுக்கொடுத்து அடிவாங்கும் நிலைமை ஏற்படும். இதன்மூலம் இலங்கையில் தமிழர்களுக்கான அதிகாரம் கோரும் போராட்டமும் தமிழ் தேசியக்கட்சிகளின் இருப்பும் இல்லாதொழிக்கப்படும், நாட்டில் தமிழ் மக்களுக்கு எந்தவொரு இனரீதியான பிரச்சினைகளும் இல்லை என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டு தமிழ் மக்களின் 5 தசாப்த போராட்டத்துக்கு முடிவுரை எழுதப்படும், இந்த நிலையை ஏற்படுத்தியவர்களாக தற்போதைய தமிழ் தேசியக்கட்சிகளும் அதன் தலைக்கன தலைவர்களும் வரலாற்றில் பதியப்படுவர்.

எனவே இந்த சந்தர்ப்பத்திலும் ஒன்றுபடாது தனித்தனியாக போட்டியிட்டு தோல்வியடைந்த பின்னர் தமிழ் மக்கள் சிங்களக் கட்சிக்கு வாக்களித்து விட்டார்கள், தமிழ் மக்களிடம் தமிழ் தேசிய உணர்வு இல்லை. வடக்கு தமிழர்களை நினைத்து வெட்கப்படுகின்றோம், வேதனைப்படுகின்றோம். தமிழ் இளைஞர்கள் வழிதவறி சிங்களக் கட்சியின் பின்னால் செல்கின்றார்கள் என்றெல்லாம் ஒப்பாரி வைக்க எந்தவொரு தமிழ் தேசியக்கட்சிகளுக்கும் தமிழ் தேசிய அரசியல் தலைவர்களுக்கும் உரிமை கிடையாது. எனவே தமிழ் தேசியத்தின் இருப்பை பாதுகாக்கவேனும், வடக்கு, கிழக்கைத் தக்க வைக்கவேனும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் தமது தலைக்கனம், மேதாவித்தனம், ஒற்றுமையின்மை, விடாப்பிடியைக் கைவிட்டு மாகாணசபைகளுக்கான தேர்தலில் ஓரணியில் திரள வேண்டும்.

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதனை தமிழ் தேசிய அரசியல் கட்சிகளும் தலைவர்களும் இனியாவது கருத்தில் எடுக்க வேண்டும். இல்லையேல் வடக்கு மாகாணம் பறிபோவதை யாராலும் தடுக்க முடியாது. எனவே மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டுமென வரிந்து கட்டி நிற்கும் தமிழ் தேசிய கட்சிகள் ஓரணியாக தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகாது விட்டால் "பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு கட்டிய கோவணத்தையும் பறி கொடுத்த கதை"யாகவே மாகாணசபைகளுக்கான தேர்தல் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுக்கு அமையும்.

## கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றியம்

வணக்கம், கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றிய அறிவித்தல்.

கனடா நாட்டில் தமிழ்ச் சமூக மையம் (Tamil Community Center) அமைப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் ஒன்றினை ஒழுங்கு செய்து கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றிய செயலவை நடாத்தவுள்ளது.

இடம்: செந்தாமரை கலாச்சார மண்டபம்
1160 Tapscott Rd, Unit 2, Scarborough ON
காலம்: 15 November 2025 3.30PM -7.00PM

கனடா நாட்டில் எமது தமிழர்களின் இருப்பு என்பது ஒன்று அவசியமானது. எதிர்கால எமது சமூகத்தின் விடிவுக்காக நாம் இணையவேண்டியது காலத்தின் கட்டாயம். ஒவ்வொரு ஊர் சங்கங்களின், தமிழ் அமைப்புகளின் நிதி பங்களிப்புகளில், செயற்பாடுகளில் தான் எமது தமிழ் சமூகத்தின் முன்னேற்றமும் எதிர்காலமும் தங்கியுள்ளது. இது ஒரு இனத்துக்கான முதலீடு. ஒன்றிணைவோம் வென்றெடுப்போம். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் ஆலோசனைகளை வழங்குமாறு, எமது மண்ணின் எதிர்கால தூண்களான மாணவர்களையும், கனடா வாழ் மாதகல் மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். **தொடர்புகளுக்கு:**

(647) 403-1203 (416) 282-0947 (416) 904-2844
(416) 816-0956

## நினைவுறுத்தல் நாள்

உலகப் போர்களில்
மடிந்த வீரர்களை
உணர்வு மேலிட
தொழுதிடும் நாள்
கனடாவில்
கார்த்திகை பதினொன்றில்
பதினொன்று பதினொன்றுக்கு
காலால் படையினரின் சோககீதம்
விண்ணைத் தொட
காவியநாயகரை
நினைவு கூர்வர்
மாவீரர் நினைவீடத்தில்
மலர் வளையம்
மரியாதை
அஞ்சலி
இருபத்தொரு வேட்டுக்கள்
மனம் உருகி
மரியாதை அணிவகுப்பு
மறவர்குலத் தமிழர் நாமும்
மறக்காது செய்திடுவோம்.

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

கனடிய செய்திகள்
Canadian News

# Federal Government introduces new bail and sentencing reforms to protect Canadians

# கனடிய மக்களைப் பாதுகாக்க மத்திய அரசு புதிதாக திருத்தப்பெற்ற பிணை மற்றும் தண்டனை சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துகிறது




Canada's new Government is taking decisive action to ensure our communities remain safe places to live, work, and raise a family – including for families and neighbours in Markham-Thornhill. Bill C-14, the Bail and Sentencing Reform Act, is taking action on crime by making bail laws stricter and sentencing laws tougher for repeat and violent offenders, supporting law enforcement, and investing in long-term crime prevention.

This important legislation introduces over 80 changes to the Criminal Code to protect Canadians, including:

• Requiring reverse-onus bail for major crimes.
• Allowing consecutive sentencing so multiple crimes mean longer time behind bars.
• Imposing harsher penalties for organized retail theft.
• Restricting conditional sentences for several sexual offences.

Typically, during the bail process the "onus", or responsibility, is on prosecutors to prove why an accused person should stay in jail. In a reverse onus situation, the accused must prove why they should be released. This means that individuals who have been accused of dangerous crimes will stay behind bars unless they can convince the court they are not a threat to public safety.

The Act will enforce tougher sentencing laws by imposing consecutive sentences for violent crimes like auto theft, breaking and entering, extortion, and arson. This will require offenders to serve prison terms one after another rather than simultaneously. The legislation also introduces aggravating factors—circumstances that make crimes more serious and warrant harsher penalties—for offences against first responders and essential infrastructure. It also eliminates house arrest for certain sexual offences, restores driving bans for serious vehicular crimes, and strengthens fine enforcement.

"While we are encouraged that crime rates in York Region have been declining, we cannot ignore that nationally, rates have increased over the 2 UNCLASSIFIED - NON CLASSIFIÉ last decade, particularly for serious offences. Our government shares the concerns felt by Canadians that one violent crime is one too many. Our number one priority is keeping Canadians safe, but we recognize there is still work to do. That is why Bill C-14 will strengthen Canada's Criminal Code to keep violent and repeat offenders off our streets and keep the Canadian public safe."

Hon. Tim Hodgson, Member of Parliament for Markham-Thornhill. Public safety depends on everyone working together. The federal government establishes the legal framework by creating Criminal Code provisions that govern when and how bail can be granted, but these laws are only effective when provincial and territorial governments fulfill their critical role of administering justice by conducting bail hearings and enforcing bail conditions.

The federal government is collaborating with the provinces to make sure every level of government works together on public safety. Bill C-14 builds on our government's previous measures to keep our communities safe. We introduced legislation to strengthen Canada's immigration system and borders and combat transnational crime, illegal fentanyl, money laundering, and human trafficking. We tabled the Combatting Hate Act and introduced cyber security measures to safeguard families and businesses from online fraud, financial scams, and cyber threats.

Our $1.3 billion Border Plan will protect our sovereignty and secure our border by hiring 1,000 new Canada Border Services Agency (CBSA) officers, and we will also hire 1,000 Royal Canadian Mounted Police (RCMP) personnel, with a Budget 2025 investment of $1.7 billion over four years to increase federal policing capacity across Canada.

Fraud and financial crimes are increasingly harder to detect and remain a growing threat. Budget 2025 introduces the following measures to protect Canadians from financial scams and abuse:

• The National Anti-Fraud Strategy will require banks to implement new, stronger fraud prevention policies.
• The new Financial Crimes Agency will be established to lead the fight against sophisticated financial crimes.

3 UNCLASSIFIED - NON CLASSIFIÉ These initiatives, alongside Bill C-14, deliver on our new government's commitment to better protect Canadians. Together, these coordinated efforts demonstrate our commitment to building safer, more secure communities for all Canadians—because when our communities are strong, Canada is strong.

---

கனடாவின் புதிய அரசாங்கம், மார்க்கம்-தோர்ன்ஹில்லில் தொகுதியில் உள்ள குடும்பங்கள் மற்றும் அயலவர்கள் உட்பட, நமது சமூகங்கள் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், குடும்பத்தை வளர்ப்பதற்கும் பாதுகாப்பான இடங்களாக இருப்பதை உறுதிசெய்ய தீர்க்கமான நடவடிக்கை எடுத்து வருகிறது. பில் சி-14, பிணை மற்றும் தண்டனை சீர்திருத்தச் சட்டம், பிணைச் சட்டங்களை கடுமையாக்குவதன் மூலமும், மீண்டும் மீண்டும் வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு தண்டனைச் சட்டங்களை கடுமையாக்குவதன் மூலமும், சட்ட அமுலாக்கத்தை ஆதரிப்பதன் மூலமும், நீண்டகால குற்றத் தடுப்பில் முதலீடு செய்வதன் மூலமும் குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த முக்கியமான சட்டம் கனடியர்களைப் பாதுகாக்க குற்றவியல் சட்டத்தில் 80 க்கும் மேற்பட்ட மாற்றங்களை அறிமுகப்படுத்துகிறது, அவற்றுள்:

- பெரிய குற்றங்களுக்கு தலைகீழ் பிணை தேவை.
- பல குற்றங்களுக்கு தொடர்ச்சியான தண்டனையை அனுமதிப்பது சிறைகளுக்குப் பின்னால் நீண்ட காலம் ஆகும்.
- ஒழுங்கமைக்கப்பட்ட சில்லறை திருட்டுக்கு கடுமையான தண்டனைகளை விதித்தல்.
- பல பாலியல் குற்றங்களுக்கு நிபந்தனை தண்டனைகளை கட்டுப்படுத்துதல்.

பொதுவாக, பிணைச் செயல்பாட்டின் போது, குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் ஏன் சிறையில் இருக்க வேண்டும் என்பதை நிரூபிக்க "பொறுப்பு" அல்லது பொறுப்பு வழக்குரைஞர்கள் மீது உள்ளது. தலைகீழ் பொறுப்பு சூழ்நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர் ஏன் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை நிரூபிக்க வேண்டும். இதன் பொருள், ஆபத்தான குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள், பொதுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்று நீதிமன்றத்தை நம்ப வைக்க முடியாவிட்டால், அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

வாகனத் திருட்டு, வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வீடுகளை உடைத்தல் மற்றும் நுழைதல், மிரட்டி பணம் பறித்தல் மற்றும் தீ வைப்பு போன்ற வன்முறைக் குற்றங்களுக்கு தொடர்ச்சியான தண்டனைகளை விதிப்பதன் மூலம் கடுமையான தண்டனைச் சட்டங்களை இந்தச் சட்டம் அமல்படுத்தும். குற்றவாளிகள் ஒரே நேரத்தில் அல்லாமல் ஒன்றன் பின் ஒன்றாக சிறைத்தண்டனை அனுபவிக்க இது கட்டாயப்படுத்தும். முதல் பதிலளிப்பவர்கள் மற்றும் அத்தியாவசிய உள்கட்டமைப்புக்கு எதிரான குற்றங்களுக்கு குற்றங்களை மிகவும் தீவிரமாக்கும் மற்றும் கடுமையான தண்டனைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் சூழ்நிலைகள் போன்ற மோசமான காரணிகளையும் இந்த சட்டம் அறிமுகப்படுத்துகிறது. இது சில பாலியல் குற்றங்களுக்கான வீட்டுக் காவலையும் நீக்குகிறது, கடுமையான வாகனக் குற்றங்களுக்கு வாகனம் ஓட்டுவதற்கான தடைகளை மீட்டெடுக்கிறது மற்றும் அபராத அமுலாக்கத்தையும் வலுப்படுத்துகிறது.

யோர்க் பிராந்தியத்தில் குற்ற விகிதங்கள் குறைந்து வருவதாக நாங்கள் ஊக்குவிக்கப்பட்டாலும், கடந்த தசாப்தத்தில், குறிப்பாக கடுமையான குற்றங்களுக்கு, 2 வகைப்படுத்தப்படாத குற்றங்களில் தேசிய அளவில் விகிதங்கள் அதிகரித்துள்ளன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஒரு வன்முறை அல்லது குற்றம் மிக பாரதூரமானது மற்றும் அதிகமானது என்று கனடியர்கள் உணர்ந்த கவலைகளை எங்கள் அரசாங்கம் பகிர்ந்து கொள்கிறது. கனடியர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே எங்கள் முதன்மையான முன்னுரிமை, ஆனால் இன்னும் செய்ய வேண்டிய வேலை இருக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். அதனால்தான் வன்முறை மற்றும் மீண்டும் மீண்டும் குற்றவாளிகளை எங்கள் தெருக்களில் இருந்து விலக்கி வைக்கவும், கனடிய பொதுமக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் பில் C-14 என்னும் கனடாவின் குற்றவியல் சட்டத்தை வலுப்படுத்தும்."

மார்க்கம்-தோர்ன்ஹில் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு டிம் ஹாட்சன். பொது பாதுகாப்பு அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதைப் பொறுத்தது. எப்போது, எப்படி பிணை வழங்க முடியும் என்பதை நிர்வகிக்கும் குற்றவியல் சட்ட விதிகளை உருவாக்குவதன் மூலம் கூட்டாட்சி அரசாங்கம் சட்ட கட்டமைப்பை நிறுவுகிறது, ஆனால் இந்த சட்டங்கள் மாகாண மற்றும் பிராந்திய அரசாங்கங்கள் ஜாமீன் விசாரணைகளை நடத்துவதன் மூலமும் ஜாமீன் நிபந்தனைகளை அமல்படுத்துவதன் மூலமும் நீதியை நிர்வகிப்பதில் தங்கள் முக்கிய பங்கை நிறைவேற்றும்போது மட்டுமே பயனுள்ளதாக இருக்கும்.

அரசாங்கத்தின் ஒவ்வொரு மட்டமும் பொது பாதுகாப்பில் ஒன்றாகச் செயல்படுவதை உறுதிசெய்ய கூட்டாட்சி அரசாங்கம் மாகாணங்களுடன் ஒத்துழைக்கிறது. எங்கள் சமூகங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க எங்கள் அரசாங்கத்தின் முந்தைய நடவடிக்கைகளை மசோதா C-14 அடிப்படையாகக் கொண்டது. கனடாவின் குடியேற்ற அமைப்பு மற்றும் எல்லைகளை வலுப்படுத்தவும், நாடுகடந்த குற்றம், சட்டவிரோத ஃபெண்டானில், பணமோசடி மற்றும் ஆள் கடத்தலை எதிர்த்துப் போராடவும் நாங்கள் சட்டத்தை அறிமுகப்படுத்தினோம். இணையவழியிலான மோசடி, நிதி மோசடிகள் மற்றும் சைபர் அச்சுறுத்தல்களிலிருந்து குடும்பங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களைப் பாதுகாக்க வெறுப்பு எதிர்ப்புச் சட்டத்தை நாங்கள் தாக்கல் செய்தோம், மேலும் சைபர் பாதுகாப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தினோம்.

எங்கள் $1.3 பில்லியன் எல்லைத் திட்டம் 1,000 புதிய கனடா எல்லை சேவைகள் முகாமை (CBSA) அதிகாரிகளை பணியமர்த்துவதன் மூலம் நமது இறையாண்மையைப் பாதுகாக்கும் மற்றும் நமது எல்லையைப் பாதுகாக்கும், மேலும் கனடா முழுவதும் மத்திய காவல் திறனை அதிகரிக்க நான்கு ஆண்டுகளில் $1.7 பில்லியன் வரவு செலவுத் திட்ட முதலீட்டில் 1,000 றோயல் கனடியன் மவுண்டட் போலீஸ் (RCMP) பணியாளர்களையும் பணியமர்த்துவோம்.

மோசடி மற்றும் நிதி குற்றங்களைக் கண்டறிவது மேலும் வளர்ந்து வரும் அச்சுறுத்தலாகவே உள்ளது. நிதி மோசடிகள் மற்றும் துஷ்பிரயோகத்திலிருந்து எமது கனடியர்களைப் பாதுகாக்க வரவு செலவுத்திட்டம் 2025 பின்வரும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துகிறது:

- தேசிய மோசடி எதிர்ப்பு உத்தி வங்கிகள் புதிய, வலுவான மோசடி தடுப்புக் கொள்கைகளைச் செயல்படுத்த வேண்டும்.
- அதிநவீன நிதி குற்றங்களுக்கு எதிரான எமது நடவடிக்கைகளை வழிநடத்த புதிய நிதி குற்ற நிறுவனம் நிறுவப்படும்.

3 வகைப்படுத்தப்படாதது - வகைப்படுத்தப்படாதது இந்த முயற்சிகள், பில் C-14 உடன் இணைந்து, கனடியர்களை சிறப்பாகப் பாதுகாப்பதற்கான நமது புதிய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வழங்குகின்றன. ஒன்றாக, இந்த ஒருங்கிணைந்த முயற்சிகள் அனைத்து கனடிய மக்களுக்கும் பாதுகாப்பான, அத்துடன் மிகவும் பாதுகாப்பான சமூகங்களை உருவாக்குவதற்கான நமது உறுதிப்பாட்டை நிரூபிக்கின்றன - ஏனெனில் நமது சமூகங்கள் வலுவாக இருக்கும்போதுதான் கனடா வலுவாக இருக்கும் என்பதை நாம் நம்புகின்றோம்.

இங்கே காணப்படும் படத்தில் மார்க்கம்-தோர்ன்ஹில் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான மாண்புமிகு டிம் ஹாட்சன் அவர்கள் யோர்க் பிராந்திய காவல்துறையின் உயர் அதிகாரிகளோடு உரையாடிய பின்னர் அவர்களோடு நிற்கின்றார்.

கனடிய செய்திகள் Canadian News

# CHAPEL RIDGE & NORTH TORONTO CELEBRATE OPEN HOUSE FOR NEW CREMATORIUM BUILT FOR SOUTH ASIAN COMMUNITY

# தென் ஆசிய சமூகத்திற்காக கட்டப்பட்ட உடல்கள் தகனம் செய்யும் புதிய மையத்தை திறந்த வைப்பதில் சேப்பல் ரிட்ஜ் மற்றும் வடக்கு ரொறன்ரோ தகனக்கிரியைகள் நிறுவனம் ஆகியவை மகிழ்ச்சியடைகின்றன



November 8, 2025 - Chapel Ridge Funeral Home & its new Crematorium – North Toronto Crematorium in Gormley (Hwy 404 & Stouffville Road) celebrated an Open House for the South Asian Community on Saturday, November 8th.

18 temples and seniors' organizations were represented for the tour and ceremony, with refreshments and donations made to those organizations represented.

The new North Toronto Crematorium was designed and built to specially accommodate the Hindu traditions of the South Asian Community – with a beautiful prayer room for up to 150 people, and state of the art witnessing and cremation facilities.

Temples from across the GTA have begun using the new "Everything in One Place" North Toronto Crematorium facility, noting its beauty and sensitivity to Hindu rituals and traditions.

Chapel Ridge also partners with St. John's Dixie Crematorium in Mississauga to serve families from West Toronto, Mississauga, Brampton and beyond. The Dixie chapel holds up to 250 people and has on site services, witnessing and cremation.







To arrange a funeral at the new Crematorium, or to pre-arrange in advance, call Chapel Ridge at 905-305-8508 and ask to speak to one of our Funeral Directors.

---

நவம்பர் 8, 2025 - கோர்ம்லியில் உள்ள சேப்பல் ரிட்ஜ் இறுதிச் சடங்கு இல்லம் மற்றும் அதன் புதிய - வடக்கு டொராண்டோ தகனக் கிரியைகள் மையம் பெருந்தெரு 404 மற்றும் ஸ்ரோவில் வீதி சந்திப்புக்கு அருகில் நவம்பர் 8 சனிக்கிழமை தெற்காசிய சமூகத்திற்கான இல்லத்தைக் திறந்து வைக்கும் நிகழ்வை அந்த மக்களோடு சேர்ந்து கொண்டாடியது.

தகனக்கிரியைகள் மையத்தை சுற்றிக் காண்பித்தல் மற்றும் திறப்பு விழாவிற்கு 18 கோயில்கள் மற்றும் முதியோர் அமைப்புகள் சிறப்பாக அழைக்கப்பட்டிருந்தன அத்துடன் அவைகள் தங்கள் சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்தன, அந்த அமைப்புகளுக்கு சிற்றுண்டி மற்றும் நன்கொடைகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.







புதிய வடக்கு டொராண்டோ தனக்கிரியைகள் மையமானது தெற்காசிய சமூகத்தின் இந்து மரபுகளை சிறப்பாக ஏற்றுக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது - 150 பேர் வரை தங்கக்கூடிய அழகான பிரார்த்தனை மண்டபம் மற்றும், அதிநவீன சாட்சியம் மற்றும் தகன வசதிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ரொறன்ரோ பெரும்பாகத்திலிருந்து வரும் கோயில்கள் புதிய "ஒரே இடத்தில்" வடக்கு டொராண்டோ இடுகாடு வசதியைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன, அதன் அழகு மற்றும் இந்து சடங்குகள் மற்றும் மரபுகளை உணர்ந்து கொள்ளும் பாரம்பரியம் ஆகியவற்றைக் குறித்துக் காட்டுவதாக அமைகின்றன.

மேற்கு டொராண்டோ, மிசிசாகா, பிரம்ப்டன் மற்றும் அதற்கு அப்பால் உள்ள நகரங்களில் வாழும் குடும்பங்களுக்கு சேவை செய்வதற்காக, மிசிசாகாவில் உள்ள செயிண்ட் ஜான்ஸ் டிக்ஸி தகனக் கிரியைகள் மையத்தோடு சேப்பல் ரிட்ஜ் கூட்டாக இணைந்துள்ளது. டிக்ஸி தேவாலயத்தில் 250 பேர் வரை தங்கலாம், மேலும் அங்கு சேவைகள், சாட்சியமளித்தல் மற்றும் தகனம் ஆகியவை உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய தகனக்கிரியைகள் செய்யும் மையத்தில் இறுதிச் சடங்கை ஏற்பாடு செய்ய அல்லது முன்கூட்டியே ஏற்பாடு செய்ய, சேப்பல் ரிட்ஜ் நிறுவனத்தை (905) 305-8508 என்ற இலக்கத்தில் அழைத்து, எமது இறுதிச் சடங்கு நடத்தும் இயக்குநர்களில் ஒருவரோடு உரையாடி எமது சேவைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இங்கே காணப்பெறும் படங்கள் நவம்பர் 8 சனிக்கிழமை அன்று எடுக்கப்பெற்றவையாகும்.

# கனடாவில் தமிழ்நெறியில் முதன்முதலாகக் கொண்டாடப்பெற்ற "பாட்டருவி தமிழ்மாமணி" க. உயிரவன் அவர்களின் மணிவிழா



கனடா மொன்றியலில் 25-10-2025 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில் கனடா தமிழாழிப் பேரவை, மற்றும் கனடா வாழ் நண்பர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் ஒன்று சேர்ந்து தமிழாழிப் பேரவைத் தலைவர், பாட்டருவி தமிழ்மாமணி க. உயிரவன், தவராணி இணையர்களுக்கு தமிழ்நெறியில் மணிவிழாவை மிகச்சிறப்பா கொண்டாடினார்கள்.

மொன்றியல் வாழ் வித்துவான் திரு. லோகன் தமிழிசை முழங்க, ஐயன் திருவள்ளுவர் சிலையுடன் திருக்குறள் நூல், செங்கோல், நாகமுடி, நிறைகும்பம், மணிவிழா விளக்குகள், அறுகம் தட்டு, தேங்காய்த்தட்டு, பழத்தட்டு, மாலைத்தட்டு, கணையாழித்தட்டு, பூத்தட்டு, பழத்தட்டு, பலகாரத்தட்டு பண்பாட்டுத்தட்டு என ஒன்பது வகையான தட்டுடன் திரு. க.உயிரவன்-தவராணி இணையர்கள் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை, தோழர்கள், தோழிகள் உறவினர்கள் புடை சூழ மணி நடை பயின்று வந்தனர். வரும்போது யேர்மன் தமிழ்எம் தொலைக்காட்சியின் இயக்குனர் முனைவர் சிவநேசன் அவர்கள் இசையமைத்த க.உயிரவன் இணையருக்கான வாழ்த்துப் பாடல் ஒலித்தது.

அதைத் தொடர்ந்து ஒட்டாவா முத்தமிழ்ச்சங்கத்தின் தலைவர் சிவசோதி, ரொரன்ரோ பாடகர் நாதபாரதி கி. சுதாகரன் இருவரும் திருக்குறள் ஓதினார்கள். திருக்குறள் ஓதும் அதேவேளையில் பாட்டருவி தமிழ்மாமணி க. உயிரவன்-தவராணி இணையர்கள் முதல் முறை திருவள்ளுவரை வலம் வந்து மணமாலை சூடி குங்குமம், சந்தனம் இட்டனர். இரண்டாம் முறை வலம் வந்து கணையாழி அணிந்தார்கள். மூன்றாம் முறை வலம் வந்து நாகமுடி சூடி செங்கோல் ஏந்தினா ர்கள். அப்போது சபையில் உள்ள அறிஞர்கள் கலைஞர்கள், பெரியோர்கள் தாமரைவீசி, பூக்கள் சொறிந்து, நெல்அறுகு தூவி, மணிவிழா தலைவன்தலைவியை வாழ்த்தினார்கள்.

மொன்றியல் வர்த்தகப் பெருமகனும் சமூகசேவையாளருமான ஏ.எம்.ஆர் மு.இராசகோபால் முதன்மை விருந்தினராகவும் திரு. சி. மோகன்குமார் சிறப்பு விருந்தனராகவும் கலந்து கொண்டு உரையாற்றி னார்கள். மொன்றியல், ரொரன்ரோ, ஒட்டாவா, கோன்வால் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் சபையில் நிறைந்து இருந்து தமிழ்முறையில் நடந்த மணிவிழா கண்டு வியந்தார்கள். திரு. க. உயிரவன் எழுதிய பாடல்களை இசைமணி கே.வி. செல்வன், பாடகர் கா.பவானந்தன், நாகபாரதி கி.சுதாகரன், ஆகியோர் பாடினார்கள். திரையிசைப் பாடகர் பாண்டிச்சேரி யமான் அவர்கள் எழுதி இசையமைத்து பாடிய உயிரவனுக்குரிய தமிழன்தமிழன் பாடலுக்கு மொன்றியில் மூத்த நடிகர் ப.குகானந்தம் நடித்து சிறப்பித்தார். பாடகர் தர்மராசனின் திரையிசை பாடலும், சுதா -பவானந்தன் குழுவினர் மற்றும் தமிழாழி அலைகள் குழுவினர்களின் நடனமும், விழாவை சிறப்பித்தன.

கனடா உதயனின் பத்திரிகையின் முதற்பக்கத்தில் க. உயிரவனின் மணிவிழா செய்தி பார்வையிட்ட தமிழ்நாடு, ஈழம், மலேசியா, மியன்மார், அவுசுரேலியா, ஐரோப்பா நாடுகளில் இருந்து பலர் வாழ்த்துகளைத் தெரித்து மகிழ்ந்தனர்.









# இவ்வார ராசிபலன்

**14-11-2025 வெள்ளி தொடக்கம் 20-11-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** பணிவான பேச்சு பணம் வரவு தரும் வாரம். விவேகம் கூடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. செலவுகள் அதிகமாகும். திடீர் செலவு ஏற்படும். நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மதிநுட்பத்தோடு செயல்படுவீர்கள். நட்டமில்லாமல் நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். உளுந்து தானம் செய்வதால் சிறந்த பலனை அடையலாம். பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழிலமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும் வகையில் அமையும். ஊக்கம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாளைய கனவு நனவாகும். குதூகலம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 4,9,2,7
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,X




**ரிஷபம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். தனம் சேரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் திருப்தி தரும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் தீரும். நன்மைகள் பெருகும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர சுகங்கள் கூடும். எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் நிறைந்திருக்கும். திருப்தியான காலம். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனைத் தீரும். உடல் சோர்வு ஏற்பட்டு விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Y




**மிதுனம்:** எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும் வாரம். முன்னேற்றமான காலமாக அமையும். மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மையுண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவுகள் ஏற்படும். வருத்தங்கள் மறையும். எதிர்ப்புக்கள் விலகும். வசந்தம் தேடி வரும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செய்தி அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். வேலைபளு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றித் தரும். இனிய தகவல் வந்து சேரும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் அக்கறை தேவை. சிறப்புக்கள் சேரும். வெறுப்புகள் அகலும். பங்குச்சந்தை லாபம் தரும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து நீங்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. உடன்பிறப்பால் உதவிகள் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B




**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். தொட்டது துலங்கும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. குடும்ப ஒற்றுமை அதிகமாகும். முயற்சிகள் வெற்றி தரும். கமி'ன் தொழில் லாபம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். போட்டிகள் கடுமையாகும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதமாகும். புதிய சிந்தனை உதயமாகும். கௌரவத்தில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். உறவினர் பகை மாறும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். இடமாற்றம் நன்மை தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மனநெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குழப்பங்கள் நீங்கும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 8,4,9,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேச பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். விரோதங்கள் விலகும். காரியம் வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய் வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். தொல்லைகள் அதிகமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். ஆண்களின் அதிகாரம் உயரும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தன லாபம் பெருகும். கடன் சுமை குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். உடல்நலம் சீராகும். தடைகள் விலகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். எதிர்கால சிந்தனை ஏற்றம்பெறும். குதூகலமான மனநிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K




**கன்னி:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். விரக்திகள் மறையும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தில் செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச்சுமை குறையும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. கடுமையான காலம். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். உள்ளம் மகிழும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான தருணம். மூத்தோர்கள் மனக்குறை அகலும். மனக்குழப்பம் தீரும். தொட்டக் காரியம் ஜெயமாகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். வேலை பளு குறையும். சந்தோ'ம் அலைமோதும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். கடன் கச்சைகள் தீரும். மனம் அமைதி தேடி அலைவீர்கள். காதலில் வெற்றிக் காண்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நடக்கும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. போட்டி பொறாமைகள் விலகும். திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடுங்கள். உடல்நலம் சீராகும். முகப்பொலிவு கூடும். திட்டமிட்ட செயல் வெற்றிப் பெறும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். அரசு வழி ஆதாயம் பெருகும். பணியில் உயர்வு உண்டு. வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். மன அமைதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 2,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,Z





**துலாம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும் வாரம். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். பணியில் உயர்வு உண்டு. அறிவாற்றல் பளிச்சிடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிடைக்கும். பொறாமைகள் விலகும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். விலை உயர்ந்தப் பொருட்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பொருளாதாரம் உயரும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். புண்ணியம் சேரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். பித்தளை தொழில் லாபம் தரும். எதிர்ப்புக்கள் விலகும். திருமணப் பேச்சு வரும். உணவு பிரியம் அதிகரிக்கும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஏற்படும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். கமி'ன் தொழில் லாபம் தரும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். வெளிநாட்டு நபருடன் பேச்சு நடக்கும். நிர்வாகத் திறமை கூடும். எதிர்பார்ப்புக்கள் கூடும். பொறுப்புக்கள் கூடும். முன்கோபத்தைத் தவிர்க்கவும். இடமாற்றம் நன்மை தரும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பணத்தட்டுப்பாடு ஏற்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். அற்புதமான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L

(தொடர்ச்சி 22 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1172

## (வரலாறும் மரபும்)

## சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில்

### உடுப்பிட்டி

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி வடிவினரான சிவபெருமானை, முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். சைவத்தின் சின்னங்களையும், வழிபாட்டு முறைகளையும் பழம்பெரும் நாகரீகமாகக் கருதப்படும் சிந்துவெளிநாகரிகக் கண்டுபிடிப்புக்களின் மூலம் அறிய முடிகின்றது. இதன்மூலம் சைவத்தின் தொன்மையையும், பெருமையையும் அனைவரும் அறிந்து கொள்ளலாம். அக்காலத்தில் இயற்கையோடிணைந்த வழிபாடாகக் காணப்பட்ட சைவம், காலப்போக்கில் முதிர்ச்சி பெற்ற மதமாக மாறியுள்ளது. கோவில், கோபுரம், ஆகம, வைதீக கிரியைமுறைகள், திருவிழாக்கள், திருமுறை, சைவசித்தாந்தம், கலைகள், சைவத்தின் தத்துவவிளக்கவெளிப்பாடுகள் எனப் பல துறைகளிலும் தனித்துவமான தன்மைகளைக் கொண்டுள்ளது. அத்தோடு மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கேற்ற வாழ்வுநெறிகளையும், தன்னகத்தே கொண்ட நெறியாக விளங்குவது சைவம் எனின் மிகையாகாது. ஆரம்பத்தில் சைவத்திற்கு, சனாதனதர்மம் என்ற பெயரே காணப்பட்டுள்ளது. இதற்கு நிலையான நீதிநெறிமுறை எனப் பொருள் கொள்வர். மக்களைச் செம்மையான முறையில், சமூக உணர்வோடு, வாழ்வாங்கு வாழ்வாற்கு உதவுகின்ற நெறியாகவும், அம்மனிதர்களைப் படிப்படியாகப் பக்குவப்படுத்தி, மனித நிலையினின்றும் தெய்வீக நிலைக்கு உயர்த்த உதவும் உயர்ந்த நெறியாகவும் சைவம் விளங்குகின்றது.

ஆத்திக, நாத்திகக் கொள்கைகள் மனித மனதிலே காணப்பட்டபோதிலும், கடவுள் ஒருவர் உண்டென்பதை நாள்தோறும் நிகழும் செயல்களை அவதானிப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். மனிதனின் எண்ணத்திற்கு அப்பாற்பட்ட நிலையில், இயற்கை நியதி செயற்பட்டு உலக நிகழ்வை ஒருங்குபடுத்தி வருவது கண்கூடு. நம்பிக்கையும், அன்பும் துன்பத்திலிருந்து விடுதலை பெற்று இயங்க ஆதாரமாயுள்ளது. இவற்றை நமக்கு அளிப்பனவாகக் காணப்படுபவை திருக்கோயில்கள். திருக்கோயில்களுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை அகத்தாலும், புறத்தாலும் கண்டு மனங்குளிர்ந்து, எமது துன்பங்களை மறந்து நலம் பெறுவதற்குத் திருக்கோயில்களும், வழிபாட்டு முறைகளும் ஆதாரமாயுள்ளன. இத்தகைய திருக்கோயில்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. தாம் விரும்பிய வடிவங்களிலே தெய்வங்களைக் கண்டு வழிபடும் மரபினைத் தமிழர்கள் பண்டு தொட்டு இன்றுவரை பேணி வருகின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகீழ்த்திசையில் உள்ள வடமராட்சிப்பகுதியில், சைவமுந் தமிழும் செழித்தோங்கும் ஊராகத் திகழ்வது உடுப்பிட்டி. இங்கு எழுந்தருளி அருளாட்சி புரிந்துவரும் சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில், அறுநூறாண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையுடையதாகத் திகழ்கின்றது. அறுவகைச் சமயங்களைத் தழுவிய வழிபாட்டு நெறி, ஈழத்திலே பெரும்பான்மையாகப் பேணப்பட்டபோதிலும், சிவசக்தி அம்சமான பததிரகாளி சமேத வீரபத்திரக்கடவுளுடைய வழிபாடும் தமிழ்மக்களால் பின்பற்றப்படுகின்றது.

சிவனின் அறுபத்திநான்கு திருக்கோலங்களுள் இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், வைரவர், வீரபத்திரர், நிருத்தமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, பிட்சாடணமூர்த்தி ஆகிய ஒன்பது மூர்த்திகளை வணங்குவதே மரபாகக் காணப்படுகின்றது. இவ்வடிவங்களுள் இலிங்க வடிவம் மட்டுமே கருவறைக்குள் நிறுவப்படுவது வழக்கம். எனினும் வீரபத்திரர், பைரவர் ஆகியோரின் உருவத்திருமேனிகளையும் கருவறைக்குள் நிறுவி வழிபடுவது, சைவ வழிபாட்டின் முதிர்ச்சி நிலையைக் காட்டுவதாகக் காணப்படுகின்றது. இந்தவகையிலே இலிங்கம், வீரபத்திரர், பைரவர் ஆகிய மூன்று சிவவடிவங்களும் தனிப்பெருஞ் சிறப்புப் பெற்றவையாக விளங்குகின்றன.

மும்மூர்த்திகளாகப் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோர் கருதப்படுகின்றனர். இவர்களுள் படைத்தல் தொழிலைப் புரிந்துவரும் பிரம்மதேவனுக்கு அவதாரம் கிடையாது. காத்தற் கடவுளாகிய விஷ்ணுபகவானுக்கு மாத்திரமே அவதாரங்கள் உண்டு. சிவனுக்கு அவருடைய அம்சமாக அவதாரம் கிடையாது. ஆனால், அவருடைய சக்தியினால் சிவ அம்சமான வீரபத்திரர், காலபைரவர் போன்ற பல சொரூபங்கள் காணப்படுகின்றன. இவர்களை அவதாரங்களாகக் கருதாது, சிவகணங்களிலே, சிவமூர்த்தங்களிலே சேர்ப்பதே மரபாகக் காணப்படுகின்றது. இந்த வகையிலே சிவமூர்த்தமாகக் கருதப்படும் வீரபத்திரசுவாமி, சக்தி அம்சமான பத்திரகாளியோடு எழுந்தருளி அருள்பாலிக்கும் சிறப்பு, மிக மிக விசேடமானதாகக் கருதப்படுகின்றது.

இத்தகைய பெருமை பெற்ற சைவத்தின் அறிவுமுதிர்ச்சியை எடுத்தியம்பும் வீரபத்திரமூர்த்தி வழிபாடு உடுப்பிட்டியில் பல்லாண்டு காலமாகப் போற்றப்பட்டு வருகின்றுத சிவன், சக்தி, கணபதி, முருகன், போன்ற தெய்வங்களைப்பற்றிச் சைவமக்கள் அறிந்தளவிற்கு, வீரபத்திரமூர்த்தியின் தோற்றம் பற்றிப் பெரிதாக அறியவில்லை. வீரபத்திரமூர்த்தியின் சிவாம்சத் தோற்றத்தினைப் புராணக் கதைகள் விளக்கியுள்ளன. புராணவரலாறு என்பது மிகப் பழமையான வரலாறு என்பதைக் குறிக்கும் சொல்லாட்சியாகவே விளங்குகின்றது. சிவபரத்துவத்தினையும், சிவவேள்வியின் சிறப்பினையும், வேள்வியில் வழங்க வேண்டிய அவிப்பாகத்தின் முக்கியத்துவத்தினையும் உலகிற்கு உணர்த்தி நிற்கும் சிவனின் உக்கிர வடிவமே, வீரபத்திர மூர்த்தி என்பதைப் புராணக் கதைகள் வாயிலாக அறிய முடிகின்றது. சிவமகா புராணம், பிரமபுராணம், கூர்மபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம் ஆகியவற்றிலே வீரபத்திரமூர்த்தியின் தெய்வீக வரலாற்றை விரிவாக அறியலாம்.

*வளனரும்..*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## திருவள்ளுவர் கலாசார மையம் அமைந்துள்ள நிலப்பரப்பு யாழ். மாநகர சபையின் சொத்தாகும் என்கிறார் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி!

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையம் அமைந்துள்ள நிலப்பரப்பு யாழ். மாநகரசபையின் சொத்து. அது ஒரு சந்தர்ப்பத்திலும் இன்னொரு தரப்பினருக்கு வழங்கப்படவில்லை என யாழ். மாநகரின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரின் மாதாந்த அமர்வு 12ம் திகதி புதன்கிழமை அன்று முதல்வர் மதிவதனி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது யாழ். மாநகருக்கு உரித்தான காணி நிலங்கள், கட்டடங்கள் என்பன அரச நிறுவனங்களுக்கு வழங்குவதில்லை என யாழ். மாநகரசபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஈ.பி.டி.பியின் உறுப்பினர் இளங்கோ (றீகன்) முன்பள்ளி ஒன்றின் கட்டுமான விடயத்துக்கு காணி வழங்குவது அவசியம் என்றும் அது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இவ்விடயம் தொடர்பில் உறுப்பினர் தர்சானந்த், அரசின் எந்த தரப்பினருக்கும் கணியோ, கட்டடங்களோ வழங்க முடியாது. அவ்வாறான ஆதனங்களை வழங்குவதாயின் சபையின் அதிகாரத்தின் கீழ் அவற்றை கொண்டு, வாடகைக்கு வழங்க வேண்டும். குறிப்பாக அரச கட்டமைப்பான கிராம சேவகர், சமுர்த்தி, பொருளாதார உத்தியோகத்தர் போன்ற தரப்பினருக்கு வழங்குவதாயின் வாடகை அறவிடுவது அவசியம் என்றுன் குறிப்பிட்டார்.

இதன்போது மாநகரின் மேலும் பல்வேறு காணிகளின் தொடர்பில் விவாதிக்கப்பட்டபோது குறித்த காணி இன்னொரு நாட்டுக்கு கொடுக்கப்பட்டதான கருத்துப்பட உறுப்பினர் ஒருவர் விமர்சனம் முன்வைத்தபோதே அவர் இவ்வாறு மீள் நினைவூட்டிச் சுட்டிக்காட்டினார்.

இதேநேரம் சபையின் ஆழுகையின் கீழ் இருக்கும் காணிகள் கட்டடங்களை, தனியாருக்கு வழங்க முயற்சிப்பின் ஆட்சி அதிகாரத்தை, யாழ் மாநகரசபையின் ஆதிக்க வரையறைக்குள் கொண்டு, கால எல்லையின் அளவில் அவ்வாறு கோரும் தரபினருக்கு ஒப்பந்த அடிப்படையிலோ, வாடகை அடிப்படையிலோ சபையின் முடிவுடன் வழங்க முடியும் என்றும் பொதிமுறொன்றை உறுப்பினர் யோகேஸ்வரி சுட்டிக்காட்டினார்.

குறித்த விடையம் சபையில் உறுப்பினர்களால் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

## மாவீரர் நாள் என்பது சைக்கிள் கட்சிக்கான ஒன்றல்ல என்பது தொடர்பாக யாழ்ப்பாண மாநகர சபையில் கடும் வாக்குவாதம்!



நவம்பர் 27 நினைவு நாளை கொண்டாட ஒற்றுமையாக வாருங்கள் இல்லையேல் இரு தரப்பினருக்கும் நல்லூர் பகுதி நிலம் வழங்கப்படாது என முதல்வர் மதிவதனி தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரின் மாதாந்த அமர்வு 12ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற நிலையில் நல்லூர் மேற்கு வீதியில் இருக்கும் காணியில் நினைவேந்தல் செய்வதற்கு வழங்குவது தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

இதன்போது சைக்கிள் கட்சி மற்றும் மான் கட்சி ஆகியனயார் நினைவேந்தலை குறித்த இடத்தில் நடத்துவது என்று கடும் வாதப் பிரதிவாதம் நடைபெற்றது. குறிப்பாக சைக்கிள் கட்சிக்கு மட்டும் நினைவேந்தல்கள் செய்யும் உரிமை கிடையாது. அனைத்து தமிழ் தேசித கட்சிகளுக்கும் அதனை நினைவேந்த உரிமை உண்டு.

இதே நேரம் வருடா வருடம் சைக்கிள் கட்சி தரப்பினரே திலிபனின் நினைவு நாள், மாவீரர் நாள் போன்றவற்றை குத்தகைக்கு எடுத்து செய்வது போன்று அடாத்தாக முன்னெடுக்கின்றனர்.

இதை ஏற்க முடியாது. இந்நிலையில் குறித்த விடையத்தில் ஒற்றுமை இன்மையால் தான் இரு பிரிவாக நிகழ்வுகள் இரு தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் கீழ்த்தரமான நிகழ்வு நடக்கின்றது.

அதன்படி நினைவேந்தல் நிகழ்வை நடத்த குறித்த காணியை மான் கட்சி தரபினர் இம்முறை குத்தகைக்கு கோரியுள்ளனர். ஆனால் சைக்கிள் தரப்பினர் அதனை ஏற்க இயலாதவர்களாக குழப்பங்களை உருவாக்கி வருகின்றனர்.

எனவேதான் சபை ஏற்கனவே இரு தரப்பினரையும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து நிகழ்வை நடத்துவது யார் என்று முடிவை தெரிவிக்குமாறு கோரியிருந்தது. ஆனால் குறித்த காலப்பகுதியில் இரு தரப்பினரும் எந்தவொரு பதிவையும் எம்முடன் முன்னெடுக்கவில்லை. இதனால் முடிவை சபையே எடுக்க நேரிட்டுள்ளது.

குறித்த விவாதத்தை ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி புறக்கணித்திருந்த நிலையில் காணியை இரு தரப்புக்கும் வழங்குவதில்லை என்றும் பொது இணக்கபாட்டுடன் தேசிய பரப்பில் இருக்கும் கட்சிகள் ஒன்றிணைந்து நடத்த முன்வந்தால் அதற்கு இடம் கொடுக்கப்படும் என்றும் முதல்வரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** பணவரவும், மனநிறைவும் தரும் வாரம். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். சேமிப்பு வளரும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் ஆன்மீகவாதிகள் முன்னேற்றம் அடைவீர்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வரம் தரும் காலம். நட்பு வட்டம் விரிவடையும். ஆசைகள் நிறைவேறும். பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கடன்சுமை குறையும். பணப்புழக்கம் சரளமாகும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். நோய் அகலும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களை கட்டும். தாய் வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். முன் கோபத்தைக் குறைக்க வேண்டும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். பொறியியல் துறை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 2,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Q





**தனுசு:** சிறப்புக்கள் சேரும் வாரம். பொறாமைகள் விலகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த வி'யம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிட்டும். பொருளாதாரம் உயரும். மனைவ-ியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். ஆனந்தம் பெருகும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக்கடன் வசூலாகும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச்செலவு அதிகரிக்கும். காரிய வெற்றி கிட்டும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். பூமிவாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டாகும். விளையாட்டுத்துறையில் லாபம் அதிகரிக்கும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**மகரம்:** சாதனை படைக்கும் வாரம். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டாகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும். காரியங்கள் கைகூடும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. லாபம் தரும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்துமாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனதில் குழப்பங்கள் தீரும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். மனிதாபிமானம் உண்டாகும். மனதில் உள்ள பயம் நீங்கி விடும். வீடு வாங்கும் யோகம் உண்டாகும். வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர்கள். திருமண முயற்சி நல்லதாக அமையும். செல்வாக்கு உயரும். புகழும், பொருளும் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,2,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கும்பம்:** விரக்திகள் மறையும் வாரம். நீண்ட நாளைய கனவு ஒன்று நனவாகும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச் சொத்து சேரும். நாவடக்கம் தேவை. விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. விவாத முயற்சி வெற்றி தரும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி பெருகும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றம் ஏற்படும். வம்பு தும்புகள் ஒழியும். ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழி தொல்லை குறையும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். வீண் வம்பு விலகும். குடும்பச் சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் நிதானம் தேவை. வியாபாரத்தால் நன்மை உண்டு. மனோ-பயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். எதிர்ப்புகள் தவிடுபொடியாகும். குழப்பங்கள் நீங்கும். உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். மனநிம்மதி பெருகும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. இன்னல்கள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,T




**மீனம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். தேவைகள் பூர்த்தியாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். தொழில் போட்டி மறையும். ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். உறவுகளால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. தேவைகள் அதிகரிக்கும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவனம் தேவை. போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். இனிப்பானச் செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். நினைத்தபடி திருமணம் நடக்கும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். மற்றவர்கள் ஆலோசனை தவிர்க்கவும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,H

## வன்னி மண் தந்த வர்த்தகப் பெருமகன் இரத்தினசிங்கம் நவரட்னம் அவர்கள்!



தனது கனடிய வாழ்வுக் காலத்தின் நாற்பதாவது வெற்றிகரமான ஆண்டை அமரர் “யாழ்நகர்” நவரட்னம் அவர்கள் எட்டிபிடிக்க இருந்த வேளையில் காலன் வேகமாக வந்து எம்மிடமிருந்து அவரை தட்டிப் பறித்துக் கொண்டான். ஆகையினால் அவரது நினைவாக அவர் பற்றிய பெருமைகளைப் பற்றி ஆங்காங்கே சில வாரங்களாக பேசிக் கொண்டிருந்த நாம் அவரது ஆத்ம சாந்தி பிரார்த்தனை நாளை நோக்கி நகர்ந்து சென்று ஓரிடத்தில் கூடி அமைதியாய் அமரரது வாழ்க்கைச் சரித்திரத்தின் சாரத்தை மீண்டும் பகிர்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஆமாம்!, கனடாவில் வர்த்தகத் துறையில் புகுந்து அர்ப்பணிப்புடன் அந்தத் துறையில் பயணித்து பல நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்ட அமரர் நவரட்னம் அவர்களது இறுதிக்கிரியைகள் இடம்பெற்ற நாட்களில் பெருமைகளை பகிர்ந்து கொள்ள ஆவலாய் வந்தவர்கள் மற்றும் உற்றவராகவும் நண்பராகவும் விளங்கிய அவரது முகத்தை இறுதியாக ஒரு தடவை காண்போம் என்று அந்த மண்டபத்தில் கூடிய ஒவ்வொருவரும் இன்றைய நாள் வரையும். அவரை வழியனுப்பி வைத்த கடைசி நிமிடங்களை மறந்திருக்க மாட்டார்கள்.

பெருமைக்குரிய வன்னி மண்ணின் முல்லைத்தீவு அம்லவன்பொக்கணையைப் பிறப்பிடமாகவும், வற்றாப்பளை முல்லைத்தீவு ஆகிய இடங்களை வதிவ-டமாகவும் கொண்டிருந்த அமரர் அவர்கள் கனடாவில் 1986 ஆண்டு தனது குடும்பத்தோடு கால்பதித்தார். அன்றிலிருந்து தனது இறுதிக் காலம் வரை ஓய்வில்லாமல் உழைத்து குடும்பத்தினரை தீவிரமான நேசித்தும் அவர்களுக்காக வாழ்பவராகவும் அவர் விளங்கினார்.

கனடாவில் ஒரு புதிய சமூகமாக எமது தமிழர்கள் கூட்டாக வளர்ச்சியடைவதற்கு முன்பதாகவே வர்த்தக நோக்கத்திற்காகவும் புலம் பெயர்ந்த எமது மக்களுக்கு தாயகத்தில் பரிச்சியமானதும் பாவனைக்கு உரியவையாக விளங்கிய உணவுப் பொருட்களும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும். அதேவேளை. எமது தாய் மண்ணின் அடையாளத்தை நான் தினமும் உச்சரிக்க வேண்டும் என்ற நோக்கொடும் ஆரம்பிக்கப்பெற்ற “யாழ் நகர் ட்ரேடர்ஸ்” என்னும் தமிழர் வர்த்தக நிறுவனத்தின் பங்காளியாக நவரட்னம் அவர்கள் 1992ம் ஆண்டு இணைந்து ரொறன்ரோவின் பிரதான வீதியொன்றில் அதன் “பெயர்ப் பலகை” பளிச்சென்று தெரியும் வகையில் தொடர்ச்சியாக பல ஆண்டுகள் நிர்வகித்து வந்தார்கள்.

அத்துடன் அமரரது உதவியினால் தற்போது வரையும் வர்த்தகத்துறையில் பிரகாசிக்கின்ற தனது நண்பர்களுக்கு நிதி உதவிகள் தேவைப்படுகின்றபோது. அமரர் நவரட்னம் அவர்களே பொறுப்பாக நின்று நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுத்து மற்றவர்களின் வர்த்தக நிறுவனங்கள் வீழ்ச்சியடையாமல் “காத்து நின்றவர்” என்ற உயர்வான மதிப்பையும் தனதாக்கிக் கொண்டவர் என்பதும் பலருக்குத் தெரியாத விடயமாகும். ஏனெனில். அவர் ஆற்றிய நற்பணிகள் மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கம் ஏதும் அற்றவராகவும் அமரர் நவரட்னம் அவர்கள் விளங்கினார்.

இவ்வாறான தனது அர்ப்பணிப்புள்ள வாழ்க்கைப் பயணத்தில். தனது துணைவியாரான யோகராணி மற்றும் பாசமிகு புதல்வர்களான பகீஸ்கரன், குபேஸ்கரன், சதீஸ்கரன், றொசான் ஆகியோர் சென்ற இடமெல்லாம் சிறப்புப் பெற வேண்டும் என்பதற்காக குடும்பத்தின் பாரத்தைச் சுமந்து கடுமையாக உழைத்து பின்னாளில் அவரது குடும்பத்தை மற்றவர்கள் நிமிர்ந்து பார்க்கும் வகையில் மனைவிக்கு பக்க துணையாகவும் புதல்வர்களுக்கு கல்விச் செல்வத்தை உறுதி செய்யும் உற்ற ஒரு தந்தையாகவும் விளங்கினார் அமரர் நவரட்னம் அவர்கள். ஆனால் அனைத்தையும் அமைதியாகவும் நிதானமாகவும் ஆற்றி முடித்தார் என்பதே அவரது வெற்றியின் “இரகசியமாக” விளங்கியது எனலாம்.

“தந்தை மகற்காற்றும் நன்றி, அவயத்தில் முந்தி இருப்பச் செயல்” என்னும் வள்ளுவனின் வாக்குக்கு இணங்க அவரது புதல்வர்கள் இந்த கனடிய தமிழர் சமூகத்தின் நன்கு அறியப்பெற்றவர்களாகவும் ஆற்றல் மிகுந்தவர்களாகவும் இருப்பது என்பதும் ஒரு வெள்ளிடை மலையே! இவ்வாறாக. தமிழ்க் கனேடியர்கள் மத்தியில் வியப்போடும் விசாரிப்போடும் பேசு பொருளாக விளங்கிய அமரர் நவரத்தினம் அவர்களது பிரிவுத்துயரின் அதிர்வுகள் இங்கு மாத்திரமல்ல, அவர் தோன்றிய அந்த வன்னிமண்ணிலும பரந்து விரியும் என்ற வார்த்தைகளோடு அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்லும் ஒருவ-னாக நான் உள்ளேன் என்பதையும் பதிவு செய்கின்றேன்.!

*- அன்பன் ஆர்.என். லோகேந்திரலிங்கம்*

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND

INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN

## 416-908-5656

Office: 416-660-5656

Fax: 647-351-3099

Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation

NESAN SUBRAMANIAM

Mortgage Agent level 1 Licence # M15001465

CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1545 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 14, 2025

# Federal Government introduces new bail and sentencing reforms to protect Canadians.

# கனடிய மக்களைப் பாதுகாக்க மத்திய அரசு புதிதாக திருத்தப்பெற்ற பிணை மற்றும் தண்டனை சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துகிறது.



கனடாவின் புதிய அரசாங்கம், மார்க்கம்-தோர்ன்ஹில்லில் தொகுதியில் உள்ள குடும்பங்கள் மற்றும் அயலவர்கள் உட்பட, நமது சமூகங்கள் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், குடும்பத்தை வளர்ப்பதற்கும் பாதுகாப்பான இடங்களாக இருப்பதை உறுதிசெய்ய தீர்க்கமான நடவடிக்கை எடுத்து வருகிறது. பில் சி-14, பிணை மற்றும் தண்டனை சீர்திருத்தச் சட்டம், பிணைச் சட்டங்களை கடுமையாக்குவதன் மூலமும், மீண்டும் மீண்டும் வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு தண்டனைச் சட்டங்களை கடுமையாக்குவதன் மூலமும், சட்ட அமுலாக்கத்தை ஆதரிப்பதன் மூலமும், நீண்டகால குற்றத் தடுப்பில் முதலீடு செய்வதன் மூலமும் குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது. (தொடர்ச்சி 18ம் பக்கம்)

## CHAPEL RIDGE & NORTH TORONTO CELEBRATE OPEN HOUSE FOR NEW CREMATORIUM BUILT FOR SOUTH ASIAN COMMUNITY

## தேற்காசிய சமூகத்திற்காக கட்டப்பட்ட உடல்கள் தகனம் செய்யும் மையத்தை திறந்த வைப்பதில் சேப்பல் ரிட்ஜ் மற்றும் வடக்கு ரொறன்ரோ தகனக்கிரியைகள் நிறுவனங்கள் மகிழ்ச்சியடைகின்றன!



நவம்பர் 8, 2025 - கோர்ம்லியில் உள்ள சேப்பல் ரிட்ஜ் இறுதிச் சடங்கு இல்லம் மற்றும் அதன் புதிய - வடக்கு டொராண்டோ தகனக் கிரியைகள் மையம் பெருந்தெரு 404 மற்றும் ஸ்ரோவில் வீதி சந்திப்புக்கு அருகில் .நவம்பர் 8 சனிக்கிழமை தெற்காசிய சமூகத்திற்கான இல்லத்தைக் திறந்து வைக்கும் நிகழ்வை அந்த மக்களோடு சேர்ந்து கொண்டாடியது

தகனக் கிரியைகள் மையத்தை சுற்றிக் காண்பித்தல் மற்றும் திறப்பு விழாவிற்கு 18 கோயில்கள் மற்றும் முதியோர் அமைப்புகள் சிறப்பாக அழைக்கப்பட்டிருந்தன அத்துடன் அவைகள் தங்கள் சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்தன, அந்த அமைப்புகளுக்கு சிற்றுண்டி மற்றும் நன்கொடைகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.
(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# கனடாவின் உயரிய இராணுவ விருதுகளில் ஒன்றான Order of Military Merit பெற்ற முதல் ஈழத்தமிழர் வாகீசன் மதியாபரணம் என்னும் யாழ் இந்துக் கல்லூரியின் பெருமைமிகு பழைய மாணவர்



கனடாவின் உயரிய இராணுவ மரியாதைகளில் ஒன்றான **Order of Military Merit (M.M.M.)** விருதை தலைநகரன்மான ஒட்டாவாவில் வசிக்கும் ஈழத்தமிழரான வாகீசன் மதியாபரணம் அவர்கள் பெற்றுள்ளார். இதன்மூலம், இவ்விருதை பெற்ற முதல் ஈழத்தமிழராக வரலாற்றில் பெயர் பதித்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விருது வழங்கும் விழா, கனடாவின் ஆளுநர் ஜெனரல் வசிக்கும் **Rideau Hall** மாளிகையில் சிறப்பாக நடைபெற்றது.
(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# அரங்கேற்றமா அல்லது கச்சேரியா என வியக்கவைத்த இசைச் செல்வி விஷ்ணா திரவியராஜின் அரங்கேற்றம்



நீண்ட நாட்களுக்குப்பின்னர் ஒரு கர்நாடக வாய்ப்பாட்டு இசை அரங்கேற்றம் கடந்த 9.11.2025 ஞாயிறன்று இடம்பெற்றது.

கனடாவில் பிறந்த வளர்ந்த இளம் இசையாசிரியையான திருமதி வாரகி விஜயராஜாவின் மாணவியான செல்வி விஸ்ணா திரவியராஜ் அவர்களின் இசையரங்கம் ஸ்காபுறோ ஆர்மேனியன் கலையரங்கில் இடம்பெற்றது.

மேற்படி அரங்கேற்றத்திற்கு அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் அவர்கள் இலங்கையிலிருந்து சிறப்பு விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 16ம் பக்கம்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker